பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

நல்லூர் இன்ன நூலகம்
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 7 (20.3.94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 30

## விளையாட்டுத்துறை சார்ந்தோர்க்கு பல்கலை. அனுமதியில் சலுகை

விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அனுமதி கிடைக்கும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் வேரகொட கூறியுள்ளார். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்களைப் பாராட்டி பரிசு வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்தத் திட்டம் நடப்பு ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படுமெனவும் பல்கலைக்கழக பிரவேசத்தின் போது இத்தகைய விளையாட்டு வீரர்களுக்கு விசேட புள்ளிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# மீண்டும்யாழ்வருவதற்கு ஆரியரெட்ணா முயற்சி

## புத்தாண்டிற்கு முன் வர விருப்பம்

(கொழும்பு)

சர்வோதயத் தலைவர் ஆரியரெட்ணா மீண்டும் யாழ். வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இவர் தனது இரண்டாவது யாழ் விஜயத்தை தமிழ்-சிங்கள புத்தாண்டிற்கு முன்னதாக மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அறியவருகின்றது.

இவ் வருட ஆரம்பத்தில் யாழ். வந்த சர்வோதயத் தலைவர் ஆரியரெட்ணா மீண்டும் யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. திரு. ஆரியரெட்ணா தமிழ்-சிங்கள புத்தாண்டிற்கு முன்னதாக ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இப்பயணத்தை மேற்கொள்ள விரும்புவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை கடந்தமுறை யாழ்ப்பாணத்திற்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்ட ஆரியரெட்ணா இம்முறை இனப்பிரச்சினை விடயத்தில் கூடுதல் அக்கறை காட்டலாம் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

கடந்த விஜயத்தின் போது விடுதலைப் புலிகளை சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்திய பின்னர் ஆரியரெட்ணா இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வுகாண முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# மட்டக்களப்பில் மோதல்; 21 புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டம்

ஃ லெப். யோகேஸ்வரன் (வேலன் மகேஸ்வரன் வாக

ஃ வீரவேங்கை அலையரசன் (கந்தையா தபேந்திரன் மாங்

**லெப். கேணல் ரவி உருவப்படம் உள்ளே**

வீரச்சாவடைந்த வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேணல் ரவியின் உருவப் படம் இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது பெற்றுக்கொள்ளவும்.

# தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று திறப்பு

## வழக்கொன்றும் விசாரணை

தமிழீழ நீதி நிர்வாகம் மேன்முறையீட்டு நீதிமன்றொன்றை நேற்று வைபவ ரீதியாக தொடக்கிவைத்து மேன்முறையீடு செய்த வழக்கொன்றையும் விசாரித்தது.

தமிழீழ நீதி நிருவாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் நடந்த இந்நிகழ்வினை தமிழீழ அரசியல்துறை துணை பொறுப்பாளர் திரு. கரிகாலன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பான்ட் இசை முழங்க தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் தேசியக்கொடியை ஏற்றினார். மேன்முறையீட்டு நீதிமன்ற பெயர்ப்பலகையை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் திரை நீக்கம் செய்தார். தொடர்ந்து யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா நாடாவை வெட்டி நீதிமன்றை வைபவரீதியாக திறந்துவைத்தார்.

இம் மன்று திறந்து வைக்கப்பட்டதை அடுத்து தமிழீழ விடுதலைக்காக தம் இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தியபின்னர் திரு. கரிகாலன் உரைநிகழ்த்தினார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியாளர்களாக திருமதி சுகிர்தா டொமினிக், திரு. சுகி, திரு. நிறைஞ்சன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)



## லெப். கேணல் ரவிக்கு குடாநாடெங்கும் அஞ்சலி

வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேணல் ரவி, கப்டன் சேந்தன் ஆகியோருக்கு நேற்று முழுநாளும் யாழ் குடாநாடெங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வன்னி மாவட்டத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் வீரச்சாவடைந்த இந்த இரு போராளிகளின் நினைவாக குடாநாடெங்கும் சோகமயமாக காணப்பட்டது.

வீதிகள், பொது இடங்கள் தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்ட நிலையில் பல இடங்கள் காட்சியளித்தன.

யாழ். குடாநாடெங்கும் பரந்தளவில் இம் மாவீரர்களுக்கு அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது. (தி)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் செம்பிமடுப் பகுதியில் கடந்த புதனன்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 21 போராளிகள் வீரச்சாவடைந்தனர். இராணுவ சேதவிபரம் குறித்து தெரிய வரவில்லை.

விடுதலைப்புலிகள் தரப்பில் வீரச்சாவு அடைந்த போராளிகள்.

ஃ மேஜர் அருளப்பு (ஞானமுத்து அருளம்பலம் பாண்டிருப்பு கல்முனை அம்பாறை)

ஃ கப்டன் அரவிந் (செல்வராஜ் ஜெயராஜ் அமிர்தகளி மட்டக்களப்பு)

ஃ லெப். நாதன் (நாகமணி குழந்தைவேல் ஆறுமுகத்தான் குடியிருப்பு மட்டக்களப்பு)

ஃ லெப். யோகேஸ்வரன் (வேலன் மகேஸ்வரன் வாகனேரி மட்டக்களப்பு)

ஃ லெப். கிருமானி (திருச்செல்வம் லச்சுமிகாந்தன் பார்றோட் மட்டக்களப்பு)

ஃ லெப். மிதுரன் (அழகையா கனகச்செல்வன் குடியிருப்பு தன்னாமுனை)

ஃ 2ஆம் லெப். மைக்கல் ராஜ் (யோகராஜா சுரேஸ் ஆஸ்பத்திரி வீதி, மகிழவெட்டுவான்)

ஃ 2ஆம் லெப். கலியுகவரதன் (வடிவேல் சிவகுமார் கோட்டைக்கல்லாறு கல்லாறு)

ஃ 2ஆம் லெப். தனுகரன் (தம்பிராஜா செந்தில்குமார் காரைதீவு அம்பாறை)

ஃ வீரவேங்கை உரிமைகீதன் (விநாயகமூர்த்தி பிரகாதன் கதிரவெளி மட்டக்களப்பு)

ஃ வீரவேங்கை அலையரசன் (கந்தையா தபேந்திரன் மாங்கேணி வாகரை)

ஃ வீரவேங்கை உதயரஞ்சன் (இளையதம்பி உதயன் நாவற்காடு ஈச்சந்தீவு)

ஃ வீரவேங்கை சிவசீலன் (கோணநாயகம் சுகிர்தரன் களுவாஞ்சிக்குடி 8 மட்டக்களப்பு)

ஃ வீரவேங்கை ஞானசேகரன் (சுந்தரம் மதிவதனன் ஈச்சந்தீவு நாவற்காடு)

ஃ வீரவேங்கை வர்ணகுலன் (சுணில்) (பூபாலப்பிள்ளை சிவநாதன் கிரான் மட்டக்களப்பு)

ஃ வீரவேங்கை அன்புராஜ் (ரவீந்திரன் முரளி கொக்குவில் பிள்ளையாரடி மட்டக்களப்பு)

ஃ வீரவேங்கை ஆனந்தகுமார் (செந்தில்) (ராஜரட்ணம் கவிராஜ் கோட்டைக்கல்லாறு 1 கல்லாறு)

(6 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாடெங்கும் சோகமயமாக்கப்பட்டது.

(தி)

# வடக்கு - கிழக்குப் போருக்கு முடிவுவேண்டும்

## சுதந்திரக்கட்சி செயலாளர்

(கண்டி)

வடக்கு - கிழக்கில் தொடரும் இன்றைய யுத்தத்திற்கு ஒரு முடிவு காணப்படவேண்டும். எவ்வித அர்த்தமுமில்லாத இந்த யுத்தம் நீண்டு கொண்டு போவது வேதனைக்குரியது.

கண்டி டி- எஸ்- சேனநாயக்க பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சிறிலங்கா தொழில் தொடர்புபொறியியல்சேவையாளர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்க இவ்வாறு கூறினார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று நடைபெறும் யுத்தத்திற்காக செலவிடப்படும் 2500 கோடிரூபாவிற்கும் எவ்வித கணக்குகளும் காட்டப்படுவதில்லை. கடந்த 17 வருடங்களாக ஒரேகட்சியான ஐ. தே. க. அரசே நீடிக்கின்றது. எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் நமது தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெற்றி பெறுவது நிச்சயம். நாம் வெற்றி பெற்றால் நாட்டின் ஏழை எளிய மக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றத்தை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி செல்வராஜா நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ராணுவம் தாக்கியதில் இரு போராளிகள் வீரச்சாவு

கடந்த வியாழனன்று காலை 6.15 மணியளவில் விடுதலைப் புலிகள் சென்றுகொண்டிருந்தபோது கோவில் போரைதீவு புன்னைக்குளம் எனுமிடத்தில் வைத்து இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் வீரச்சாவு அடைந்தனர்.

லெப். சோமு (செல்லையா கிருஸ்ணகோபால் ஆறாம் கட்டை உன்னிச்சை) 2 ஆம் லெப். இன்பராஜ் (சதா) பொன்னம்பலம் சதானந்தன்

(6 ஆம் பக்கம் பார்க்க)



லெப். சோமு



2ஆம்லெப். இன்பராஜ்

# அரசு யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப்புலிகளுடன்பேசவேண்டும்

## - இந்துசமய பேரவை கோரிக்கை

இனப்பிரச்சினையை இராணுவநடவடிக்கை மூலம் ஒருபோதும் தீர்க்கமுடியாது இந்த யதார்த்த நிலையைக் கருத்திற் கொண்டு, விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை அரசு ஏற்று, யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்ய வேண்டும். அதேவேளை யாழ்ப்பாணக் குடாநாடு மீதான பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளை நீக்கிப் பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசை இந்து சமயப் பேரவை கேட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற பேரவையின் பொதுக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

வரலாற்று காலம் முதல் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர் வாழ்ந்து வருகிறார்கள். வாக்கெடுப்பை கைவிட்டு, வடக்குக் கிழக்கைத் தமிழர் தாயகமாக இணைத்துக் கொள்ளுமாறு அரசை கேட்பது.

இலங்கைத் தமிழ் அகதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள அனைத்து அடக்கு முறைகளையும், கட்டுப்பாடுகளையும் நீக்கி மனிதாபிமான முறையில் அகதிகளைப் பராமரிக்குமாறு இந்திய மத்திய அரசையும் மற்றும் தமிழ் நாடு அரசையும் கேட்பது.

கோவில் தலங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது இதனால் எமது வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசின் இப்போர்ப் பட்ட உரிமை மீறல்கள் பற்றி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காட்டுப்பன்றியினால் 12படையினர் உயிர் தப்பினர்

(கொழும்பு)

திருமலை காட்டுப்பகுதியில் காட்டுப் பன்றி ஒன்றினால் 12 இராணுவத்தினர் கண்ணிவெடியிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருமலையில் காலவேனா பகுதி காட்டில் ரோந்து சென்ற 12 படையினர் வீதியின் ஓரிடத்தில் காட்டுப்பன்றி ஒன்று மணலை கிளறிக்கொண்டிருந்ததைக் கண்டனர். இதன் போது அப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி ஒன்று திடீரென வெடிக்கவே அப்பன்றி கொல்லப்பட்டது. இதனால் இந்த 12 படையினரும் மயிரிழையில் உயிர் தப்பிக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

# கடல் தடை வலய நீக்கம் நடைமுறைப் படுத்தப்படவில்லை

## - யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வடக்கே மன்னாரிலிருந்து திருக்கோணமலை வரை கடல் தடைச் சட்டம் தளர்த்தப்பட்டிருப்பதாக செய்தி வந்ததே தவிர அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய நோக்கம் என்னஎன்பது பற்றி தமக்கு செய்தி எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நடைமுறைப்படுத்தப்படாமல் வெறும் அறிவிப்பினால் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைவர் என்று மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடல்வலயத்தடைச்சட்டம் நீக்கம் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சுக்கும் அரசா

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### தவறிவிட்டது
சித்தங்கேணி சந்திக்கும் சுரந்தனுக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7803)

### M. L. T. தேவை
தகுதி (Qualified) வாய்ந்த மருத்துவ தொழில் நுட்ப வல்லுநர் உடன் தேவை. 25-03-94ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, நிர்வாகி, வில்லியம் ஹாலே தனியார் மருத்தகம் யாழ்ப்பாணம். (7806)

### இறைச்சிக் கோழி
இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும். சுவையருவி கோழிப்பண்ணை மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8799)

### தவறிவிட்டது
18-2-94 அன்று 2 இடம் பெயர்ந்த நிவாரண முத்திரை (பரமேஸ்வரன்-விசுவலிங்கம் மஞ்சள்நிற லக்ஸ்பிறே Bagகுடன் காணவில்லை. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (7798)

### தோட்டப் பயிர்செய்
நீமியா உரம், சக்தி இயற்கைப் பசளை, மார்க்கோசின் பூச்சிகொல்லி மருந்து வீட்டிலும், தோட்டத்திலும் பயிர் ஆரோக்கியமாக வளரவும் அபரிமித விளைச்சல் பெறவும் உதவுகின்றன. தொல்புரம் சமநல சேவை நிலையத்திலும் கிடைக்கிறது. ''மில்க்வைற்'' (சி-8866)

### பசுக் கன்றுகள் விற்பனைக்கு
ரூபா 10/- மட்டுமே. சொற்பளவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE INDUSTRIES (PVT) LTD. No- 14. Seenier Lane, Jaffna- (சி-8816)

### சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு
கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு


# நோர்வேயிலிருந்து மீன்பிடிவலை செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து மேலும் ஒரு தொகுதி மீன்பிடி வலைகளைப் பெற்றுக்கொள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை முயற்சி செய்து வருகின்றது.

ஏற்கனவே யாழ் மாவட்டத்திற்கு சுமார் 18000 குடும்பங்களிற்கு மீன்பிடி வலைகளை வழங்குமாறு நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்துடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. இதன்முடிவில் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் சுமார் 3000 குடும்பங்களிற்கான மீன்பிடி வலைகளைத் தந்துதவுவதாக முன்வந்திருந்தது.

இதன் அடிப்படையில் 1300 குடும்பங்களுக்கான மீன்பிடி வலைகளை முதற் கட்டமாக நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இலங்கைச் செஞ்சிலுவைக்கு வழங்கியிருந்தது தெரிந்ததே. இவ்வலைகள் பின்னர் உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே மிகுதி 1700 குடும்பங்களுக்குமான மீன்பிடி வலைகளைப் பெற்றுக்கொள்ளவே தற்சமயம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை முயற்சி மேற்கொண்டுள்ளது. (பா)(தி)

## கோழிக் கொள்ளை நோய் வராமல் தடுக்க முடியும்

உங்கள் கோழிகளை ரணிக்கற் அல்லது கோழிக்கொள்ளை நோய் வராமல் இலவசமாக தடுப்பூசியைப் போடுவித்து காப்பாற்ற முடியும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்படுகையில்,

காலத்துக்குக்காலம் கோழிகள் தூங்குவதும் சழிச்சலுடன் இறப்பதும் எமது பகுதிகளில் சாதாரணமாக காணப்படுகின்றது.

இந்நோய்வரும் கோழிகளில் ஆரம்ப நிலையில் சாய்ச்சல், பசியின்மை, தடித்த சளி மூக்கில் வருதல், வாயை அரைப்பகுதி திறந்து மூச்செறிதல் தூங்குதல் போன்ற குணங்களைக் கொண்டிருக்கும்.

பிந்திய நிலையில் தொண்டையும் தாடையும் நீல நிறமடையும் கால்களும், செட்டைகளும் முடங்கும். மஞ்சளாக அல்லது பச்சையாக வயிற்றோட்டம் இருக்கும். சில நாளில் கோழி இறக்கும்.

இது ஒரு வைரஸ் நோய் இதற்கு மருந்து இல்லை. ஆனால் குஞ்சு பொரித்து 21 நாளிலும் பின்பு 8 1/2 மாத பருவத்திலும் தடுப்பூசியை போடுவதன் மூலம் இந்நோயை வராமல் தடுக்கலாம்.

உங்கள் பகுதி கால்நடை மிருக வைத்தியரிடம் தொடர்பு கொண்டு இலவசமாகத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## ஐ.தே.க.வை விரட்டுவேன் பௌத்த பிக்கு சூளுரை

(கொழும்பு)

தென்மாகாண முதல்வர் பதவியை ஒரு வருடத்திற்கு என்னிடம் தந்து பாருங்கள். ஆறு மாதங்களில் ஐ.தே.க.வைத் துரத்திவிடுவேன் முதலமைச்சர் பதவிக்குரிய அத்தனை பொறுப்புக்களையும் பெற்றுக்கொண்ட பின்னரே அந்த ஆசனத்தில் நான் உட்காருவேன்- தெற்கில் சமாதானத்தை நிலவச் செய்ய இந்த அதிகாரங்கள் தேவை- முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகாவைப் போல இறந்த இலிகிதராக இருக்க நான் விரும்பவில்லை-

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி சார்பில் தென்மாகாண சபைக்கு போட்டியிடும் வண பத்தேகம சமித்த தேரோ தெரிவித்தார்- அவர் அங்கு மேலும் கூறுகையில் இன்றைய அரசாங்கத்தின் அடாவடித்தனமான செயற்பாடுகளுக்கு முகம் கொடுக்க அமரசிறி தொடங்கொடவிற்கு இயலாமல் போய்விட்டது. ஆனால் நான் அதற்கு முகம் கொடுப்பேன் நான் அரசியல் நியாயங்களை மட்டும் தெரிந்து கொண்டு அரசியலில் குதித்தவன் அல்ல. அரசியல்பயிற்சியையும் தெரிந்து கொண்டு தான் அதில் இறங்கியிருக்கிறேன் எனவும் தெரிவித்தார்-

## கலை வார நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

முன்னெப்பொழுதும் இல்லாதவாறு யாழ்.பல்கலைக்கழக கலைவாரம் (Arts-week) வெகு சிறப்பாக கலைப்பீட மாணவர்களால் கொண்டாடப்பட்டுவருகின்றது.

டன் கலை வார நிகழ்ச்சிகள் முற்றுப்பெறும்.

கலை வார இறுதி சிறப்பு நாள்அன்று யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும்-கேடயங்க

### மீனவர் நிவாரணம் வழங்கப்படுகிறது

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கிளைகள்மூலம் கடந்த 17ஆம் திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம் மீனவர் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது

மீனவர் நிவாரணம் பெறும் சகலரும் தத்தமது சங்கக் கிளைகளில் நிவாரணப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

## மணலாறு பகுதியில் சூட்டடுப்பு அறிமுகம்

முல்லை, மணலாறு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் இரட்டைச் சூட்டடுப்பு பற்றிய பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் மத்தியில் இரட்டைச்சூட்டடுப்புபாவனையை அதிகரிக்கச் செய்து விறகுச் சிக்கனத்தை ஏற்படுத்தும்முகமாக முல்லை மாவட்டத்தில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய வட்டங்களிலும் குமுழமுனை, செம்மலை, உப்புக்குளம் ஆகிய கிராமங்களிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

அவ்வப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களின் வட்டத் தொடர்பாளர்கள் தலைமையில் நடைபெற்ற இப் பிரசாரக் கூட்டங்களில் இரட்டைச் சூட்டடுப்பின் பாவனை பற்றியும், நன்மைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்ட தோடு சக்திப்பகுதியின் செயற்பாடு நோக்கம் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது

இப்பிரசாரக் கூட்டங்களில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டுவருவதோடு இவ் அடுப்புக்களை தாமும் கட்டுவதற்கு தமது பெயர்களை பதிவு செய்து கொண்டு வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

### 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

(வேலணை)

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் நிர்வாக செலவினங்களுக்காக இந்தவருடம் சுமார் 4லட்சம் ரூபா நிதியினை வடக்கு- கிழக்கு மாகாண அரசு ஒதுக்கியிருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் காரியாலயத்தில் பணிபுரியும் உயர் பதவி வகிக்கும் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். (14)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்,


## நினைவு கூருகின்றோம்...

### 1994-03.20

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - கரவெட்டிப் பகுதியிற் பயிற்சியின்போது எதிர்பாராத விதமாக குளத்தில் மூழ்கியதில் எமைப் பிரிந்த-

**ரசீந்தன்** (பசுபதி சதீஸ்குமார்- அண்ணாசிலையடி கரணவாய் தெற்கு - கரவெட்டி)

1986ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

**டொனா** (பாக்கியநாதன் போல்ராஜ் -பாவற்குளம் வவுனியா)

1988ஆம் ஆண்டு மட்டு - புதூர்ப்பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட-

**யூலி** (யூலியன் - மட்டு)

திருகோணமலை - லிங்கம் விகாரைப் பகுதியில் பேருந்து ஒன்றின்மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1990ஆம் ஆண்டு அம்பாறையில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**யோண்சன்** (பா. சதீஸ்குமார்-பெரிய உப்போடை மட்டு)

1991ஆம் ஆண்டு மன்னார் - சிலாவத்துறைப்பகுதியில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பில் இரண்டாம் நாள் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். கலா** (வசந்தி இராசரத்தினம் - கடற்கரைச் சேனை, மூதூர் - திருமலை)

**சசிக்குமார்** (சின்னத்தம்பி பத்மநாதன்- 7-ம் வட்டாரம், குமுழமுனை - மணலாறு)

**திவாகரன்** (டானியல் ஜோசப்சாள்ஸ் - தாமரைக் குளம், அடம்பன் - மன்னார்)

**ஆனோல்ட்** (கிருஷ்ணபிள்ளை குகன் - பறையனாலங்குளம் வீதி - வவுனியா)

**சூரி** (வன்னி)

வடமராட்சித் தாக்குதல் தளபதி:

**மேஜர் ரஞ்சன் -சித்தப்பா** (செல்வநாயகம் தயாளன் - தம்பசிட்டி - பருத்தித்துறை)

**கப்டன் மொறிஸ்** (சண்முகம் தவராசா-இடைக்குறிச்சி வரணி- கொடிகாமம்)

**லெப். ஜொனி** (சத்தியவான் சக்திவேல் -புலோலி தெற்கு - பருத்தித்துறை)

**லெப் நாதன்** (திவாகராசா சிவானந்தன் - சித்தாவில், சதாபுரம் - பளை)

**லெப். தர்சன்-புலவர்** (யோகசாமி செந்தூரன் சிறீதரன் வீதி - வல்வெட்டித்துறை)

**லெப். சோமன்** (விநாயகமூர்த்தி இராஜேந்திரன் கல்வயல் - சாவகச்சேரி)

**2-ம் லெப். ரஞ்சித்தாத்தா** (கதிர்காமு குணபாலசிங்கம் - பேராலை - பளை)

**2-ம் லெப். அன்ரனி** (துரைசாமி அகிலன் - முள்ளானை, இளவாலை-யாழ்)

**2-ம் லெப். சதா** (சேவியூரா தேவராசா - சந்தி ஒழுங்கை - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். அம்பி** (நாகலிங்கம் கனகரஞ்சன் - புத்தூர் கிழக்கு - யாழ்)

**2-ம் லெப். காந்தரூபா** (நாகராசா ஜெயக்குமார் - புதுவளவு - வல்வெட்டித்துறை)

**சிவசங்கர்** (அடைக்கலமுத்து இராஜேந்திரகுமார் - சூரியவெளி, நாவாந்துறை - யாழ்)

**மரியநாயகம்** (கனகரத்தினம் சின்னத்துரை 1-ம்

சேவல் குஞ்சுகள்
விற்பனைக்கு

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்; (7784)

---

## பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன்பிறவுண்(Hy-Line Brown) பேட்டுக் குஞ்சுகள் 2 கிழமைவளர்ச்சியடைந்தபேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்; (7785)

---

## வெளியீட்டு விழா

மாதர் எழுச்சி விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் விடியும் காலம் விரைகிறது விழித்தெழு எனும் கையெழுத்துப் பிரதியுடன் வேறு பத்து சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டன.

## கால்நடைச் சந்தை வெற்றிகரமாக அமுல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பருத்தித்துறையில் கால்நடைச் சந்தையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இச்சந்தையில் வாரத்துக்கு ஒரு முறை கால் நடைச் சந்தையுடன் தவிடு, பிண்ணாக்கு, தீவனம் போன்ற பொருட்களும் விற்கப்படுவதோடு பால் வியாபாரமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் முயற்சியால் உற்பத்தியாளர்களும், நுகர்வோரும் பெரும் நன்மை அடைந்து வருகின்றனர்.

கழககலைவாரம் (Arts-week) வெகு சிறப்பாக கலைப்பீட மாணவர்களால் கொண்டாடப்பட்டுவருகின்றது.

எண்பது வீதமான நிகழ்ச்சிகள் நேற்றுவரை முடிவுற்றுள்ளது: எதிர்வரும் 22ஆம்திகதி மாலை 6 30 மணிக்கு ஆரம்பமாகும் ஆங்கில நாடகத்து நாள்அன்று யாழ்பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் சான்றிதழ்களும், வெற்றிக்கிண்ணங்களும்-கேடயங்களும் வழங்கப்படுவதுடன், கலைவார நிகழ்வில் 1-ம் இடத்தைப்பெற்ற ஆங்கில- தமிழ் நாடகங்களும் மேடையேறவுள்ளன குறிப்பிடத்தக்கது (05)

# சைக்கிள் திருடியவர் காவல்துறையிடம் சிக்கினார்

வல்வெட்டித்துறை காவல்துறையினரின் தீவிர தேடுதல் முயற்சியின் போது திருடிய சைக்கிளுடன் சைக்கிளை திருடியவரும் வசமாக பிடிபட்டார்.

இச்சைக்கிள் திருட்டுச் சம்பவத்தையடுத்து வல்வெட்டித்துறை காவல்துறையினரிடம் சைக்கிளும் திருடனும் சிக்கிக்கொண்ட சம்பவம் ஒன்று கலிகைச் சந்தியில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை மீன் சந்தையில் நின்ற அழகன் சிவகுமார் என்பவரின் சைக்கிள் திருடியவரை வல்வெட்டித்துறை காவல்துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்: பருத்தித்துறை நீதியாளர் பிரதீபா சைக்கிளை திருடிய நபருக்கு 1500 ரூபா குற்றப் பணம் செலுத்துமாறு நேற்று முன்தினம் கட்டளையிட்டார்.

# நிர்வாக அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான கடந்த 1991 தொடக்கம் 1993 வருடங்களுக்கான நிர்வாக அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே மேற்கூறிய மூன்று வருடங்களுக்கான, சகல யாழ் மாவட்டத் திணைக்களங்களின் தலைவர்களும் தங்கள் பிரிவிற்கான அறிக்கைகளை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ப. இலைநாயகம் சுற்று நிருப மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

நிர்வாக அறிக்கையில் இடம்பெற வேண்டிய முக்கிய விடயங்கள் யாவும் உரிய பூரண விபரங்களுடன் இரண்டு பிரதிகளுடன் தமிழ் மொழியில் மூன்று வருடங்களுக்குமான நிர்வாக அறிக்கையை வெவ்வேறாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதை ஞாபகப்படுத்திக் கடந்த 22ஆம் திகதி புதன் கிழமை திணைக்களங்களுக்கு கடித மூலம் அறிவித்துள்ளார். (24)


## தேவை

பலசரக்குக் கடை ஒன்றிற்கு பலசரக்குக் கடை முன் அனுபவம் தெரிந்த-கணக்குப் பதிவு சம்பந்தமாகவும் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். (ஆண், பெண் இருபாலாரும்)

சுதந்திராஸ் பல்பொருள் அங்காடி,
இல: 707, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

(7802)




தாயக மண்ணில்

23-10-1968

சுதந்திர சுவாசத்தில்

20 03-1991

## வீரவேங்கை டெனின்
(வெற்றிவேலு ஞானரூபன்)

தன்னிகரில்லா தனயனே
தமிழீழம் தத்தெடுத்த மைந்தனே
உனக்கு நினைவஞ்சலி செலுத்தவில்லை-ஏனெனில்
உன்னை மறந்தால்தானே நினைப்பதற்கு-அதனால்
கண்ணீர் அஞ்சலிதான் செலுத்துகின்றோம்
தணியாத தாகத்துடன் நீ தமிழ மண்ணினுள்
விதைக்கப்பட்டாய் - உன்
தாகம் அடங்கும், தமிழீழம் பிறக்கும்
உன்னைப் போன்ற தியாக வேங்கைகளால்
தனிநாடு நிச்சயம் கிடைக்கும்

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது கண்ணீரஞ்சலிக்கையாக்குகின்றோம்.

கருவேவடி லேன், - குடும்பத்தினர்
கொக்குவில் கிழக்கு; (இ-8874)


## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல் எதிர்வரும் 22-03-94 (செவ்வாய்) காலை 10-00 மணிக்கு ஆலய வெளி வீதியில் நடைபெறும்.

(7787) - நிர்வாகம்


சிவசங்கர் (அடைக்கலமுத்து இராஜேந்திரகுமார் - சூரியவெளி, நாவாந்துறை - யாழ்)

மரியநாயகம் (கனகரத்தினம் சின்னத்துரை 1-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்)

டெனின் (வெற்றிவேல் ஞானரூபன் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை - யாழ்)

சிறி (தம்பரட்ணம் நந்தகுமார் - சூராவத்தை, சுன்னாகம் - யாழ்)

விஷ்ணு (கனகரத்தினம் நித்தியானந்தம் - வியாபாரிமூலை - பருத்தித்துறை)

அனித்தா (உதயரஞ்சினி வைரமுத்து - காளிகோயிலடி, கொக்குவில் கிழக்கு- யாழ்)

கஜா (பவானி தனநாயகம் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சுடர் (சீனிவாசகம் சிதம்பரப்பிள்ளை- 3-ம் வாய்க்கால் பரந்தன் - கிளிநொச்சி)

திருமலை - பொன்னன் காணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப்.பிரதீப் (செல்லத்துரை ராஜேஸ்வரன் 3-ம் கொலனி மூதூர், -திருமலை)

1992ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ''ஒப்பரேசன் மஜபார'' நடவடிக்கையின் போது நிகழ்ந்த கடும்சமரில் வீரச்சாவெய்திய-

லெப். தங்கன் (நடராசா விமலநாதன் - கோப்பாய் - யாழ்)

1993ஆம் ஆண்டு கறுக்காய்த்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

மகாலிங்கம்-மயூரன் (சிவராசா திலகராசா- காளிகோயிலடி- சாவகச்சேரி)

யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாகஎமைப் பிரிந்த-

தென்னவன்-சேகர் (மகாலிங்கம் சுதர்சன் - சிவனேசன் வீதி, மீசாலை தெற்கு - யாழ்)

மட்டு - குடும்பிமலைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். வரகுணம் - காசிநாதன் (தாமோதரம் தவசீலன் சித்தாண்டி - மொறக்கொட்டாஞ்சேனை மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(இ-8859)

யாழ்ப்பாணம்

# மருந்தாளர்களின் தரமுயர கருத்தரங்கு நடத்தப்படும்

(வேலணை)

யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிர்வாக அமைப்பின் மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்ற இலவசசித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்ற மருந்தாளர்களைத் தரமுயர்த்துவதற்கான இருநாள் பயிற்சி நெறி ஒன்று அடுத்த மாதம் 1-ம், 2-ம் திகதிகளான வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் யாழ் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

அகில இலங்கை சித்த ஆயுர்வேத மருந்தாளர் சங்கத்தினர் மருந்தாளர்களைத் தரமுயர்த்தி அவர்களுக்கு அரசாங்கத்தினால் புதிதாக வழங்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு வடக்கு கிழக்கு மாகாண அரசின் உயர் அதிகாரிகளையும், வடக்குகிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் உயர் அதிகாரிகளையும் கடித மூலமும் நேரில் சென்றும் கேட்டுக் கொண்டதன் பேரில் இப் பயிற்சி நெறி நடாத்தப்படுகின்றது.

இப் பயிற்சி வடக்கு கிழக்கு மாகாண அரசின் நிர்வாகத்துக்குட்பட்ட சகல மாவட்டங்களில் உள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமை புரியும் மருந்தாளர்கள் அனைவருக்கும் மாவட்ட ரீதியாக நடாத்த திட்டமிட்டிருப்பதாகவும் முதலில் இப் பயிற்சி நெறி யாழ்ப்பாணத்தில் நடாத்தி பின் ஏனைய மாவட்டங்களில் நடாத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (14)

# க. பொ. த (உ-த) பரீட்சை விண்ணப்பங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குரிய விண்ணப்பப்படிவங்களை பரீட்சைத்திணைக்களம் நேரடியாக தபால் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரியவருகின்றது.

இருந்தும் ஒரு தொகுதி விண்ணப்பப் படிவங்களை யாழ் கல்வித் திணைக்களத்திற்கும் பரீட்சைத் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது.

இவ்விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

எனவே அவ்வாறு விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகள் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியுமென தெரியவருகின்றது. (பா)

# திருட்டுக் குற்றத்திற்கு அபராதம் விதிப்பு

(வடமராட்சி)

நெடியகாடு பிள்ளையார் கோயில் களஞ்சியத்தில் இருந்து எரிபொருள்கள் களவாடிய சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றது. இக் களஞ்சியத்தை உடைத்து 9150 ரூபா பெறுமதியான எரிபொருள்களை களவாடியவர் வல்வெட்டித்துறை காவல்துறையினரால் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

பருத்தித்துறை நீதிமன்ற நீதியாளர் பிரதீபா சத்திவேல் சிறிவடிவேல் என்பவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும், இழப்பீடாக 4ஆயிரம் செலுத்துமாறு கடந்த வெள்ளி தீர்ப்பு வழங்கினார்.

வல்வெட்டித்துறை காவல் துறையினர் களவாடியவரிடமிருந்து ஒரு பகுதி எரிபொருளையும் மீட்டுள்ளனர். (யோ)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

# சிரமமான காலகட்டத்தில் ஐ.தே.கவை காப்பாற்றினோம்

## - காமினி திசநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

சிரமமான கால கட்டங்களிலிருந்து ஐ. தே. கவை கரை சேர்த்த எமக்கு அக்கட்சி தொடர்பான சகல உரிமைகளும் உண்டு. எனவே யானையின் வெற்றிக்காக தியாக மனப்பான்மையுடன் அனைவரும் செயலாற்ற வேண்டும். எமக்குப் பழக்கமான அகிம்சை வழியிலான அரசியலை முன்னெடுத்து செல்வோம். இவ்வாறு முன்னாள் அமைச்சரும், ஜ. ஐ. தே. மு யின் முன்னாள் தலைவருமான காமினி திசநாயக்க தெரிவித்தார்.

ஜ. ஐ. தே. மு. யின் உறுப்பினர்களுக்கு ஐ. தே. க. உறுப்புரிமை பெற்றுக் கொடுக்கும் வைபவம் காலி நகர மண்டபத்தில் இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், லலித் அத்துலத் முதலியின் உரிமையை கூக்குரல் எழுப்புவோரால் வழங்க முடியாது. அதனை என்னால் மட்டுமே பெற்றுக் கொடுக்க முடியும். இந்த மாகாண சபைத் தேர்தலினால் நாட்டின் வரலாறு தீர்மானிக்கப்படப் போவது இல்லை. எனினும் மக்கள் இத் தேர்தல் மூலம் தெளிவானதொரு செய்தியை வழங்க முடியும்.

ஜனாதிபதி பதவியில் காணப்படும் அதிகாரங்கள் தொடர்பாக மறைந்த ஜனாதிபதியுடன் சிலபிரச்சனைகள் எமக்கு ஏற்பட்டது. இலங்கையில் மட்டுமன்றி ஜனாதிபதி முறைமை செயல்படுத்தப்படும் அனைத்து நாடுகளிலும் இத்தகைய பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

அப்பிரச்சினை பாராளுமன்ற சபாநாயகர் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட பின்னர் மறைந்த ஜனாதிபதிக்கும் எமக்குமிடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. மீண்டும் நாம் ஐ. தே. க. யில் இணையும் சூழ்நிலையை தோற்றுவிக்க மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா முயற்சி செய்தார். ஜனாதிபதி பதவி குறித்து மக்கள் கருத்தறியும் வகையில் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதன் மூலம் எமது கௌரவத்தைக் காத்து ஐ. தே. க வில் இணைய முற்பட்டோம். ஆரம்பத்தில் அதனையேற்ற ஜனாதிபதி பின்னர் மனதைமாற்றிக் கொண்டார். இதில் நானும் லலித்தும் பிடிவாதமாக இருந்தோம். இதனால் தான் நாம் மீண்டும் ஐ. தே. க யில் இணைய முடியாமற் போய் விட்டது. இன்று லலித் உயிருடன் இருந்திருந்தால் நானும் அவரும் ஒன்றாகவே சேர்ந்து ஜனாதிபதியை சந்தித்து இருப்போம். அரசியல் அதிகாரம் என்பது மிகவும் பயங்கரமானதாகும். எமது வரலாற்றை நோக்கும்போது காசியப்பன் கொலை செய்யப்பட்டதும், அரசியல் அதிகாரம் காரணமாகவேயாகும். அந்த யுகத்தை முடிவுக்கு கொண்டுவர நாம் செய்த போராட்டம் முடிவுக்கு வரும் முன்னர் அத்துலத்முதலியும் பிரேமதாசாவும் மனித வாழ்விலிருந்து விலகிவிட்டனர். இத் துயரச் சம்பவங்களின் பின்னர் ஜனாதிபதி விஜேதுங்காவுடன் எதற்காக நான் போராட வேண்டும் என்பதையிட்டு சிந்தித்தேன். அதன் நிறைவாகவே ஐ.தே.கவில் மீண்டும் இணைந்தேன் எனவும் தெரிவித்தார்.

# தினமுத்திரை இன்னமும் வந்து சேரவில்லையாம்

(வடமராட்சி)

இவ்வருடத்திற்கான தின முத்திரை (சீல்) வடமராட்சியில் உள்ள தபாலகங்களுக்கு இன்னமும் வந்துசேரவில்லை. இதனால் கடந்த வருட தின முத்திரையையே தபாலகங்கள் தற்போதும் பயன்படுத்தி வருகின்றன.

கடந்த வருட தினமுத்திரையை பயன்படுத்தி வருவதினால் கடித முத்திரைகளின் மீது சீல் இடப்படும் போது வித்தியாசங்கள் காணப்படுகின்றன. கடந்த வருட தின முத்திரையில் திகதி மாதங்கள் மாற்றப்பட்ட போதிலும் வருடத்தை மாற்ற முடியாததினால் பருத்தித்துறை தபாலகத்திலிருந்து வருகின்ற கடிதங்களில் 94க்குப் பதிலாக 4 என்று மட்டும் காணப்படுகிறது.

ஆண்டு சீரில்லாத தினமுத்திரையை பயன்படுத்துவதினால் சில முக்கிய விடயங்களில் பாதிப்புகள் ஏற்படுமென சுட்டிக் காட்டப்படுகிறது. முன்னரெல்லாம் வருட முடிவிற்குள் அடுத்த வருடத்திற்கான தினமுத்திரை வந்து சேர்ந்து விடுவது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (யோ)

# கடந்த வருட சம்பளபாக்கி பணிப்பாளர் கையேற்பு

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை வடக்கு கிழக்கு மாகாண

வடக்கு சுகாதாரப் பணிப்பாளரிடம் சென்ற 16-ம் திகதி கையளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே நேரத்தில் கடந்த

# இன்றைய நிகழ்வுகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுயசார்பு தொழில் முயற்சி நிதியத்தின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று காலை 9.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (11)

ஃ ஃ

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட ஆட்சிக்குழுக்கூட்டம் இன்று பிற்பகல் 4.00மணிக்கு நல்லை ஆதீனம் முன்பாகவுள்ள பேரவையின் தர்மசேவைத் தொடர்பகத்தில்இடம் பெறும். (24)

ஃ ஃ

(கொழும்புத்துறை)

22ஆம் திகதி கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு இன்று காலை 6 30 மணியளவில் மரதன் ஓட்டப்போட்டியும், பெண்களுக்கான 3 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் ஆண்களுக்கான 5 மைல்சைக்கிள் ஓட்டப்போட்டிகளும் அதிபர் திருமதி ப. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன. (24)

ஃ ஃ

யாழ்ப்பாணக் கல்வி வலயம் இரண்டிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக க. கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக செல்வி தணிகைச்செல்வியும் கலந்து கொள்ளவுள்ளனர். கோட்ட மட்ட போட்டிகளில் முதலிரு இடங்களையும் பெற்ற அணிகள் இப் போட்டியில் பங்கு பெற இருக்கின்றன.

ஃ ஃ

மட்டுவில் கமலாசனி மகா வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன. (86)

ஃ ஃ

தேசியம் திங்கள் இதழ் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் மூன்று மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் விடுதலைப் புலிகள்கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவைஇரத்தினதுரை தலைமையில் நடைபெறவுள்ளது. கலை, இலக்கிய நண்பர் கழகம் இவ் விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

ஃ ஃ

சித்த வைத்திய சங்கத்தினரால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சித்த வைத்தியர்களான பே. பிலிப், வ. சின்னப்பு ஆகியோரைப் பாராட்டும் விழாவும், வளர்மதி சனசமூக நிலையத்தின்வருடாந்த பரிசளிப்பு விழாவும் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரிமண்டபத்தில் அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் இன்று 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பெற்றோர்கள் அனைவரையும் தவறாதுஇக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் திரு. சு. சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (25)

# சந்திக்கக் கோரிக்கை

(வேலணை)

தீவகத்தில் இயங்கிவந்த சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் அனைத்து நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் எதிர்வரும் 22-ம் திகதி (22-03-94) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் பழைய புகையிரத நிலையத்திற்கு அண்மையில் இயங்கும் வேலணைப் பிரதேச சபையின் அலுவலகத்திற்கு வருகை தருமாறும் சில முக்கிய விடயங்கள் பற்றி இச் சந்திப்பில் கதைக்கப்பட

# அரசாங்க வேலை வாய்ப்பு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் உப புகையிரத நிலையங்களில் உள்ள அதிபர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பதவி வெற்றிடத்திற்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

இதற்குரிய விண்ணப்ப முடிவு, ஏப்ரல் 4 ஆம் திகதியாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 4-3-94 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (தி-பா)

ஃ ஃ

கடந்த டிசம்பர், ஜனவரி மாத வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு பதவிகளுக்கான விண்ணப்பத்திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளன.

ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நீடிக்கப்பட்ட ஆர

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:

25-03-1967

உதிர்வு:

13-04-1989

## திருமதி சுகிர்தராணி சிவதாஸ்
## (கௌரி)

திதி: 20-03-1994

இமயத்தின் களங்கரையே! - எம்
இதயத்தின் உயிர்த்துடிப்பே!
உதயத்துக் கதிரவனே! எம்
உதிரத்தின் உயிர்ப்பொருளே!

ஆண்டு ஐந்து சென்றபோதும் - இன்றும்
எம்மை ஆளுவதும் நீயே அம்மா!
வேண்டுமென்றால் வந்து பாரேன்!...?
வீடே வெறிச்சோடிப் போச்சுதம்மா!

உந்தன் நிழல் தேடி நானும்
உருக்குலைந்து போனேனம்மா!
எந்தன் பாதை ஒளியாக நீ
என்று மீண்டும் வருவாயம்மா!

விண்ணுலகம் சென்ற தாயே! இன்று
மண்ணுலகம் ஏங்குதம்மா!
என் இதயம் குளிர்ந்திட நீ
என்று மீண்டும் வருவாயம்மா...!

உனது பிரிவால் வாடும்,

வறணி, கணவன், மாமி, மச்சான்மார்,
வல்வெட்டித்துறை, மச்சாள்மார், தாய், சகோதரங்கள்,
அம்மாச்சி, மருமக்கள், பெறாமக்கள்

(7730)

---

வரும் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை வடக்கு கிழக்கு மாகாண அரசு பொறுப்பெடுத்துள்ளதுடன் அங்கு கடமையாற்றும் அனைத்து விரிவுரையாளர்கள், மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கான சம்பளங்களையும் கொடுப்பதற்கான நிதியினையும் வடக்கு கிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் மாகாணப்பணிப்பாளரான வைத்தியகலாநிதி பூ. உரோமகேசன் யாழ்மா

கையளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே நேரத்தில் கடந்த ஆண்டு (1993) ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய சம்பளப் பணமே இவர்களுக்குக் கொடுக்கப்படவுள்ளதாகவும், இவ்வருடம் கொடுக்கப்பட வேண்டிய சம்பளப் பணங்கள் பின்னர் இவர்களுக்கு கையளிக்கப்படவிருப்பதாகவும் உரோமகேசன் நமது நிருபருக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறினார். (14)

# இந்து இளைஞர் பேரவை மாநாடு கல்முனையில்

(வேலணை)

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பதினொராவது பேராளர் அவையும் தேசிய மாநாடும் எதிர்வரும் 26-ம், 27-ம் திகதி ஆகிய இருதினங்களிலும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை இராமகிருஷ்ண சங்க மகாவித்தியாலயத்தில் நடைபெற விருக்கின்றது.

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைவர் திரு. வ. முருகப்பன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த தேசிய பேராளர் மாநாட்டிற்கு இலங்கையின் சகல மாவட்டங்களிலும் உள்ள இந்து இளைஞர் பேரவையில் இருந்தும் பல பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றார்கள். யாழ் மாவட்டத்தில் இருந்தும் இரண்டு பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொள்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (14)

# கடற்படை தாக்குதல்களால் மீனவர்கள் மத்தியில் அச்சம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கடலில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கடற்படையினரின் தாக்குதல்களினால் மீனவர்கள் தமது சுயதொழிலைச் செய்ய அஞ்சுவதோடு தொழிலை இழந்தும் வருகின்றனர்.

அண்மைக் காலமாக வடமராட்சி வடக்கு, கிழக்கு கடற் பிராந்தியங்களில் கடற்படையினரின் அடாவடித்தனங்களுக்கு இலக்காகி பல மீனவர்கள் உயிரிழந்தும், காயப்பட்டும் வந்ததையடுத்து மீனவர்கள் கடலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

அரசாங்கம் கடல்வலயச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாகஅறிவிக்கப்பட்டு இரண்டு வாரத்திற்குள் 4 மீனவரை கடற்படையினர் பலியாக்கி, ஐந்து மீனவர்களை காயப்படுத்தியுள்ளமை தெரிந்ததே.

கடற்படையினரின் கெடுபிடி நிலையால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டனர். தற்போது இவர்களுக்கு தொழிலும் இல்லை, மீனவர் நிவாரணமும் இல்லாத நிலையில் காணப்படுகின்றனர். இத்தகைய நிலையில் வடமராட்சி வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (யோ)

---

பிரதேச சபையின் அலுவலகத்திற்கு வருகை தருமாறும் சில முக்கிய விடயங்கள் பற்றி இச் சந்திப்பில் கதைக்கப்படவிருப்பதாகவும் தீவக சனசமூக நிலையங்களின் சமாசத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

## பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும்

(தொல்புரம்)

அறவழிப் போராட்டக் குழுவினரால் நடாத்தப்படும் அறவழிப் பயிலகத்தில் தட்டெழுத்து, நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல், சைக்கிள் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறிகளில் பங்குகொள்ள விரும்பும் பயிற்சியாளர்கள் அறவழி செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (41)

## மாடு திருடியவருக்கு தண்டனை விதிப்பு

(வடமராட்சி)

மணற்காடு பகுதிமேய்ச்சல் தரையில் நின்ற வளர்ப்பு மாடு ஒன்றை களவாடிய எட்டுப்பேர் நாகர்கோவில் காவல்துறையினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

மேற்படி காவல்துறையினர் குற்றவாளிகளான எட்டுப் பேருக்கு எதிராக பருத்தித் துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர். பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் நஷ்டஈடாக மூவாயிரம் ரூபாவும் குற்றப்பணமாக தலா 1500 ரூபாவும் கட்டுமாறு கட்டளை யிட்டார்.

குடத்தனை மேற்கைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இலங்கேஸ்வரன் என்பவரது மாட்டை திருடி இறைச்சிக்காக பயன்படுத்தினர் என்று நாகர்கோயில் காவல்துறையினர் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். (யோ)

---

இதற்குரிய விண்ணப்ப முடிவு, ஏப்ரல் 4 ஆம் திகதியாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 4-3-94 வீரகேசரியில் பார்வையிடலாம்.

(தி - பா)

ஃ ஃ

அரசாங்கப் பாடசாலைகளில் தொழில் நுட்ப (கைப்பணி) ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்கு தகுதியுடைய ஆண் - பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை 4 - 4 - 94 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர், கல்விச் சேவைச் சபை, இசுருபாய பொலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று கல்விச் சேவைச் சபை அறிவித்துள்ளது.

கள் நீடிக்கப்பட்டுள்ளன.

ஆயுர்வேதத் திணைக்களத்தினால் நீடிக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு 'ஆ' உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது மார்ச் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜனவரி வர்த்தமானியில் பார்க்கவும் என ஆயுர்வேத ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தொலைக் கல்வி பாடநெறிக்கான ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திகதி இம்மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என தேசிய கல்வி நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரம் சென்ற டிசம்பர் 17 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(தி - பா)

# அன்னை பூபதி நினைவாக நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

(வடமராட்சி)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி வடமராட்சிப் பகுதிகள் அனைத்தும் வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சியில் வட்டரீதியாக அன்னை பூபதியின் நினைவு நாளையடுத்து சிரமதானங்கள், கருத்தரங்குகள், அடையாள உண்ணாவிரதங்கள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி ஏற்பாடுகள் பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி வட்டரீதியாக நடைபெறவுள்ளன.

மேற்குறித்த காலப்பகுதியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, அன்னை பூபதி குடியிருப்பு, பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், மேஜர் செங்கதிர் பூங்கா, விளையாட்டு மைதானம் வாய்க்கால்கள் ஆகியன சிரமதானம் மூலம் செப்பனிடப்படவுள்ளன.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வட்டரீதியாக கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. கரவெட்டி வட்டத்தில் ஐந்து கருத்தரங்குகளும், உடுப்பிட்டி வட்டத்தில் ஆறு கருத்தரங்குகளும், பருத்தித்துறை வட்டத்தில் ஆறு கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன.

மேலும் அன்னை பூபதியின் படங்கள் வைத்து தீபம் ஏற்றி மலர்சூடி பராமரிக்கப்படும். அடுத்த மாதம் 17, 18 ஆம் திகதிகளில் ஒவ்வொரு வட்டத்திலும் அவ்வப்பகுதி மக்களால் அடையாள உண்ணாவிரதங்களும் நடைபெறும்.

இறுதி நாள் 19 ஆம் திகதி அல்வாய் தெற்கு மாலிசந்தி பிள்ளையார் ஆலய முன்றலில் வடமராட்சி கோட்டத்திற்கான பொதுக்கூட்டமும் இடம்பெறும். (யோ)

# குற்றமுறை பலாத்காரம் எதிரிக்கு ஆறுமாத சிறை

பெண்மணி ஒருவர் மீது குற்றமுறையிலான பலாத்காரம் புரிந்த ஒருவருக்கு நீதிமன்றம் ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நாவற்கோவில் பகுதியைச் சேர்ந்த பதினேழு வயதான இளைஞர் ஒருவர் அதேஇடத்தைச் சேர்ந்த 37 வயது நிரம்பிய பெண்மணி ஒருவரின் கையைப் பிடித்து இழுத்து பலாத்காரம் புரிந்ததாக காவல்துறையினரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

காவல்துறையினரால் நெறிப்படுத்தப்பட்ட இவ்வழக்கில் எதிரி சார்பாக சட்ட அறிஞர் செ. கணேசராசா மன்றில் தோன்றினார். வழக்கைச் செவிமடுத்த நீதிபாளர் இ. ஒப்பிலான் இத்தகைய குற்றச் செயல்கள் சமூகத்தை மிகவும் பாதிக்கும் செயல்களாகும் என்று விபரித்து ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# கல்விக்கோட்டத்திற்கு ஒரு தேசிய பாடசாலை

(கொழும்பு)

ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் சகல வசதிகளையும் கொண்ட ஒவ்வொரு பாடசாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுளளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு ஒவ்வொரு கல்விக் கோட்டத்திற்கும் ஒவ்வொரு தேசிய பாடசாலை, சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


அருச்சுனா வீதியில்!
ஒப்பற்ற ஓர் கலைப்படைப்பு
அருச்சுனா

- பார்த்தவுடன் பூரிக்க வைக்கும் படங்களை சிறந்த முறையில் சட்டமிடவும்
- சட்டம் இடப்பட்ட சிறந்த படங்களை நீங்கள் தெரிவு செய்து பெற்றிடவும்

மேலும்

- படச்சட்டங்கள் (பிறேம்கள்) (வெவ்வேறு அளவுகளில்)
- கோல்ட் ரேப்
- சிலிக்கோன் பேஸ்ட்
- சுவாமிப்படங்கள், சீனறிப்படங்கள்

ஆகியவற்றை ஒரே இடத்தில் பெற்று நீங்கள் பூரிப்படைய
நாடுங்கள்
அருச்சுனா
அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(8870)


# தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம் கீர்த்தனை இயற்றும் போட்டி

# பெறுபேறுகள் வரவில்லை மாணவர்கள் பாதிப்பு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களின் கடந்த வருட பரீட்சை முடிவுகளில் உயிரியல் பிரிவு மட்டுமே வெளியாகியுள்ள அதே வேளை ''பௌதிகப் பிரிவு'' மாணவர்களின் பெறுபேறு இன்னும் வெளியாகவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை முடிவுகள் வெளிவராத அதேவேளை அடுத்த பரீட்சைக்காக தயார் செய்வதற்கான விடுமுறை (Study Leave) எதிர்வரும் 26-ம் திகதி முதல் விடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

உரிய காலத்தில் இம்மாணவர்களுக்கான பரீட்சை முடிவுகள் வெளிவராத பட்சத்தில் சாதாரண பரீட்சார்த்திகள் மற்றும் மீள் பரீட்சார்த்திகள் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சென்றவருட இறுதியாண்டு மாணவர்களின் (விஞ்ஞானபீடம்) பெறுபேறுகள் வெளிவராமையினால் மாணவர் தரப்பு பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான பல்கலைக்கழக நடைமுறை இதுவே முதல் தடவையென பல்கலைக்கழக மாணவ சமுதாயம் குறை கூறியுள்ளது.

# கிழக்குமாகாணத்தேர்தலில் பொலிஸார் முறைகேடு

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில்அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது ஏறாவூர், காத்தான்குடி பிரதேசங்களில் 13க்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் குழப்பக்காரர்களுக்குப் பின்னால் சில பொலிஸார் இருந்துள்ளதாகத் தான் சந்தேகம் கொள்வதாக தேர்தல்ஆணையாளர் சந்திரானந்தடிசில்வா சந்தேசியாவிற்குத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காரியாலய அதிகாரிகள் சிலருடன் மட்டக்களப்பு அரசஅதிபர் திரு. கே. மோனகுருசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விசாரணையின்போது இவ்விடயம் தெரியவந்துள்ளது. பிரச்சினைக்குரிய தேர்தல் களங்களில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தமது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை எனத் தெரியவருவதாகக் கூறியுள்ளார். தேர்தல் களத்திலிருந்த அதிகாரிகளையும் வாக்களிக்க வந்தவர்களையும் ஆயுதம் தாங்கியகுழுவினர் வந்து பயமுறுத்தியபோது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரியவருவதாக அவர்மேலும் கூறினார்.

பொலிஸாரில் சிலர் இச்சம்பவத்தைச் சிறியதாக எடுத்துக்காட்ட முயன்றுள்ளதாகவும், பொலிஸாரின் வாக்குமூலத்தைப் பார்க்கும் போது இது தெரியவருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்குள்ளவர்களுக்குக் கொலை பயமுறுத்தல் விடுக்கப்பட்ட போது அவர்களை ஏன் கடவில்லை எனக்கேட்டபோது பாதுகாப்புக்கடமையிலிருந்த அந்த அதிகாரிகள் சிரேஷ்ட தேர்தல் அதிகாரியின் உத்தரவுக்காகக்காத்திருந்தமையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனக்கூறியுள்ளனர். இதுதான் அவர்கள்கொடுத்த வாக்குமூலம் எனத் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் பாதுகாப்பில் உள்ள ஒருவரால் அத்தகைய அறிக்கையை விட முடியுமா எனக் கேட்டுள்ளார்.

தற்போது தான் தனது கடமையைச் சரியாக செய்துள்ளதாகவும் தமது கடமைகளைச் செய்யத் தவறிய பொலிசார் மீது அவர்களது கட்டுப்பாட்டு நடவடிக்கையை எடுக்கும் வண்ணம் பொலிஸ்மா அதிபரிடம் தான் விசாரணை அறிக்கையைக் கையளித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

# வேலையற்ற பட்டதாரிகள் 95-ல் வேலை வாய்ப்பு

## தொழில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற சகல பட்டதாரிகளுக்கும் அடுத்த ஆண்டு முடிவடைய முன்பு வேலை வும் குறிப்பிட்டார்.

தற்போது வேலையற்ற பட்டதாரிகள் சுமார் 1276 பேர் வரையில் பதிவு செய்யப்

# உரிமைகளைப் பெறுவதற்காக கைகட்டி நிற்க வேண்டியதில்லை

## - அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

உரிமைகளைப் பெறுவதற்காக நாம் அரசிடம் கைகட்டி நிற்கவேண்டிய அவசியம் இல்லை. நாம் அஞ்சியோ பயந்தோ வாழவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என கிராமிய சுற்றுலாத்துறை அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

தொண்டா மன்றத்தின் இரண்டாவது மாநாடு நுவரேலியா புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் தொண்டமான் மேலும் கூறுகையில், உரிமைகளை வழங்குவது சட்டப்படி ஏட்டில் இருந்து மட்டும் பயனில்லை. அது செயலிலும் இருக்க வேண்டும். தொண்டமானின் கருத்துக்களைக் கேட்போர் வயோதிபர்கள் எனப் பத்து வருடங்களுக்கு முன்னர் சிலர் கூறினர். ஆனால், இன்று தொண்டா மன்ற இளைஞர்கள் இங்கு பெருமளவில் கூடிநின்று எனது கருத்தைக் கேட்பதால் தொண்டமானின் கருத்தை இளைஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்பது உறுதியாகிறது.

இருபது வருடங்களுக்கு மேலாக ஐ. தே.கா வுடன் சேர்ந்து இருந்த போதும் எமது தேவை என்னவென்று அரசுக்குத் தெரியவில்லை. ஒரு கோப்பையை வைத்துக் கொண்டு இரண்டு கோப்பைகளைக் கேட்பதாக கூறுகின்றனர். நாம் அப்படிக் கேட்கவில்லை. இந்த நாட்டில் மற்றைய சமூகத்தைப் போல் எமது சமுதாயமும் இருக்க வேண்டும் என்று தான் நாம் கேட்கின்றோம். அதற்கு மற்றவர் பெற்றுள்ள உரிமை எமக்கும் வேண்டும் அந்த உரிமையை நாம்பெற்றேதீருவோம். அதற்குஇளைஞர்களாகிய நீங்கள் எனக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். யானையின் பலத்தைத் தெரிந்து கொண்டிருப்பதுபோல் எமது மக்களின் பலத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் அது அதனிலும் பெரியது எனவும் குறிப்பிட்டார். இம்மாநாட்டில் கண்டியிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தைச் சேர்ந்த உதவி இந்தியத்தூதுவர் அ. கருப்பையாவும் கலந்து கொண்டார்.

# கட்டுநிதி அனுப்பப்பட்டது

(நல்லூர்)

இம்மாத ஆசிரியர் சம்பளத்தை வழங்குவதற்கான கட்டுநிதி யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் தமது சம்பள வேலைகளைச் செய்து முடித்து கட்டுநிதியைக் கோரிய கல்விக்கோட்ட நிதி உதவியாளர்களுக்குக் கட்டுநிதி வழங்கப்பட்டதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்மாத ஆசிரியர் சம்பளத்துடன் விழா முற்பணம் ரூபா ஆயிரத்து ஐந்நூறும் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகவும் யாழ் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது (17)

# வாதுவவில் சைக்கிள்

# தமிழக வாலிபர் ஒருவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

சென்னையிலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் வந்த தமிழக வாலிபர் ஒருவர் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் இவ் வாலிபர் விடுவிக்கப்படுவதற்கு அவரது நன்நடத்தை தொடர்பாக சென்னைப் பொலிசாரின் 'கிளியரன்ஸ்' தேவை என்று சம்பந்தப்பட்ட நபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த யோகநாதன் தயாளன் (24 வயது) என்ற வாலிபர் 15 நாள் நுழைவு அனுமதியுடன் கொழும்பில் அவரது உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக வந்திருந்தார். அவர் வந்த தினத்திற்கு அடுத்த நாளில் மட்டக்குளியிலுள்ள கோவிலொன்றுக்கு ஆட்டோவில் பயணம் செய்த போது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரை விடுவிக்க இந்தியாவிலிருந்து பொலிசாரின் நன்நடத்தை சான்றிதழ் பெற்று தரவேண்டும் என்று சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவரது கைது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலராக | | மாவீரராக |
| --- | --- | --- |
| 16 – 10 – 71 |  | 20 – 03 – 91 |

**வீரவேங்கை கஜா**
**(பவானி தவநாயகம்)**

புன்னாலைக்கட்டுவனில் புவிமீது வந்தாயே
எண்ணாத தீரச் செயலெல்லாம் செய்தாயே
கண்ணாக எமக்கெல்லாம் கருத்துக்கள் தந்தாயே
எண்ணற்ற செயல் திறமை திண்ணமுடன் செய்தாயே
மண்ணுக்காய்ப் போராடி கிலாவத்துறையினிலே
சிரம்பலவீழ்த்தினாயே
திண்ணமான உன்னைத் தினமும் நினைந்திட்டு

1. கவிஞர்களிடமிருந்து பின்வரும் விடயங்களில் கீர்த்தனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன;

(1) சுவிசேட பிரபல்யம்
(2) பாவ அறிக்கை
(3) தூய ஆவி
(4) திருச்சபை

2. ஒருவர் எத்தனை கீர்த்தனைகளையும் அனுப்பலாம்: ஒவ்வொன்றும் தனித்தனி தாளில் எழுதப்பட வேண்டும்.

3. கீர்த்தனைகள், இயக்குனர் சங்கீத சபை, தென்னிந்திய சபை காரியாலயம், வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு 31-05-94 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் கீர்த்தனை சொந்தப் படைப்பாகவும் முன்னர் பிரசுரிக்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| முதற் பரிசு | ரூபா 2,500.00 |
| இரண்டாம் பரிசு | ரூபா 1,500.00 |
| மூன்றாம் பரிசு | ரூபா 1,000.00 |

இயக்குனர்,
சங்கீதசபை,
தெ. இ. யா. ஆதீனம்
வட்டுக்கோட்டை.

17-03-94 (சி-8856)

தாரிகளுக்கும் அடுத்த ஆண்டு முடிவடைய முன்பு வேலை வாய்ப்பு வழங்கப்படுமெனவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இவர்களின் தகைமைகள் தொடர்பாக முழுவிபரமும் பல்கலைக்கழகமட்டத்திலிருந்து பெறப்பட இருப்பதாகவும், அவர்களின் தகைமைக்கேற்ப வேலை வாய்ப்பு வழங்கப்படுமென

பட்டதாரிகள் சுமார் 1276 பேர் வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளதுஎன்றும், பயிற்சிக்காலத்தில் 2500 ரூபாவுக்கு குறையாத தொகை கொடுப்பனவாக வழங்கப்படுவது உறுதி செய்யப்படுமெனவும் தெரிவித்தார்.

## சைக்கிள்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அடுத்துவரும் 'வாதுவ' கப்பலில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 300 துவிச்சக்கர வண்டிகள் எடுத்துவரப்படவுள்ளன. (யோ)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

(வடமராட்சி)

சரணவாய் தெற்கு கப்புது கிராமத்தில் வயோதிபர் ஒருவர் இரவுநேரம் கிணற்றில் விழுந்து மரணமானார்.

கதிரேசு -திம்பரப்பிள்ளை (வயது80) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இச்சம்பவம் கடந்தவியாழன் இரவு 11-10 மணியளவில் நடைபெற்றது. (யோ)


இரம்பலவீழ்த்தினாயே
திண்ணமான உன்னைத் தினமும் நினைத்திட்டு
வண்ணமுகம் காணாது கலங்குகின்றோம் நாமிங்கே.

பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்;

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(7796)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நடராசா நாகேஸ்வரியம்மா

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02. 10. 1947 | 03. 03. 1993 |

திதி 20- 03- 1994

ஆண்டுகள் அடுக்கடுக்காய் வரும்
இந்த உலகம் ஓடுகின்ற வரை
உன் பூமுகம் நெஞ்சில் பவனி வரும்
நாம் உயிரோடு இருக்கும் வரை.

கணவன் நடராசாவும் (ஆனந்தி)
பிள்ளைகளும்.

பொன்னம்பலம் வீதி
மானிப்பாய்;

(7793)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப். அன்ரனி

(துரைச்சாமி அகிலன்)

| மலர்வு | வீரச்சாவு |
|---|---|
| 20-6-1972 | 20-03-1991 |

20-03-1991இல் சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது நேரடிமோதலில் வீரச்சாவடைந்த 2-ம் லெப். அன்ரனிக்கும் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.

-குடும்பத்தவர்கள்

கொழும்புத்துறை;

(7774)


யாழ் நகரில்,

சகல வகையான படங்களுக்கும்
சிறந்த முறையில் சட்டமிட்டு
வழங்கும் முன்னணி நிறுவனம்

**படமாடம்**

அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-8869)

### சிந்தனைக்கு

நெருப்புடன் பழகும்போது சுட்டுவிடும் அளவுக்குக் கிட்ட நெருங்கவும் கூடாது, குளிரில் வாடும் அளவுக்கு தூர ஒதுங்கவும் கூடாது.

- டயோஜினிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## சபாநாயகர் முன்னுள்ள சவால்கள்

தென்னிலங்கை அரசியற் சூழ்நிலை இன்றுள்ளது போல் தொடர்ந்து நீடித்தால் சிறிலங்காவின் பாராளுமன்றச் சபாநாயகர் அல்காஜ் எம். எச். முகமது அடுத்த மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருவது பெரும்பாலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

சபாநாயகர் முகமது ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். ஐ. தே. க. அரசாங்கத்தில் பல அமைச்சுப் பதவிகளை வகித்தவர். ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் இருந்து சபாநாயகராகப் பதவி வகித்து வருபவர்.

இருப்பினும், சபாநாயகர் முகமதுவின் யாழ். விஜயம் ஆளும் ஐ. தே. கட்சியின் சார்பிலானதோ, அன்றி அரசாங்கத்தின் சார்பிலானதோ எனக் கொள்வதற்கான எதுவித சமிக்ஞைகளும் இல்லை. ஆயினும் அண்மையில் இடம்பெற்ற நல்லெண்ண விஜயங்களை விட முகமதுவின் விஜயமானது முக்கியமானது என்பதில் தவறில்லை.

ஏனெனில், முகமது அரச தரப்பு பிரதிநிதியாக விஜயம் செய்யாதுவிடினும், சிறிலங்காவிலுள்ள அதி உயர் சபை ஒன்றின் தலைவர் என்ற ரீதியில் அவரது விஜயம் குறிப்பிடத் தக்கதாகும். அத்தோடு, ஒரு முஸ்லிம் தலைவர் என்ற ரீதியிலும் அவரது விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதேவேளை, சபாநாயகர் முகமதுவின் விஜயமானது பல மாதங்களின் முன்பிருந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகி சுமார் நான்கு வருடங்களை எட்டவுள்ள நிலையில், ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவர் மேற்கொள்ளும் முதலாவது விஜயமுமாகும்.

இந்த வகையில், சபாநாயகர் முகமதுவின் விஜய

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுயசார்பு தொழில் முயற்சி நிதியம்

இந்திய அமைதி காக்கும் படையினதும், இலங்கை இராணுவத்தினதும் இராணுவ நடவடிக்கையால் சொல்லொண்ணாத் துயரங்களைச் சுமந்து தமது உடைமைகளையும் இழந்து இடம்பெயர்ந்து, ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்த மக்களுக்கு கைகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம், அரச சார்பற்ற நிறுவனங்களின் மேல் சுமத்தப்பட்டது. சிறிலங்கா அரசு நிவாரணம் என்ற பெயரில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கிய போதும், மக்களின் ஏனைய தேவைகளை அரச சார்பற்ற நிறுவனங்களே குறை நிரப்பியாகக் கொடுத்துவருகின்றன.

மக்களுக்குச் சேவையாற்ற முன்வந்துள்ள நிறுவனங்களுள், குறிப்பாக வெளிநாட்டு நிறுவனங்கள் பெருந்தொகைப்பணத்தைச் செலவு செய்ய முன்வந்தாலும், தமது அரசியல் செல்வாக்கை மூன்றாம் உலக நாடுகளுக்குள் புகுத்த முனையும் நிறுவனங்களும் உண்டு. தவிர அகதிகளுக்கென்ற போர்வையில் பல்வேறு நாடுகளிலும் பெறும் பணத்தை, தமது ஆடம்பரமானநிர்வாகச்செலவிற்கு செலவிடுகின்றன. அன்றியும் இவர்கள் ஒரு விநியோக முகவர்களாக இருக்கின்றனரே அன்றி மக்களை தங்கு நிலையில் இருந்து மாற்றுவதற்குப் பரிகாரம் தேடுபவராக இல்லை.

இப்படியான செயல்கள் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு ஒரு சவாலாகவும், உத்வேகமளிப்பதாகவும் அமைகின்றது. எனினும் நிதியின்மை காரணமாக இந் நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுடன் சார்ந்தும் சேர்ந்தும் இயங்கவேண்டிய நிலை இருக்கின்றது.

இந்த நிலையில்தான் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்களின் பிரச்சினைகளுக்கு பல்வேறு கோணங்களில் முகம் கொடுக்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வந்தது. அதாவது உணவு, உடை, மருத்துவம் போன்றவற்றைக் கொடுத்துதவி பின்னர் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வந்தது. இடம் பெயர்ந்த மக்களுக்கு தற்காலிக வீட்டு வசதிகள், சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் போன்றவற்றை செய்வதோடு மட்டும் திருப்திப்படாது, மக்களின் அன்றாட தேவைகளை இனம் கண்டு கொள்வதிலும் செயலாற்றுகின்றது. மக்களின் தேவைகளான சத்துணவு, கல்விவளர்ச்சி போன்ற குறை நிரப்புத் தேவைகள் அவசியமாகக் காணப்பட்டன இத கப்பட்டது. இதனால் நாட்டின் பாரிய பொருளாதார வளமான மனித சக்தியும் முகாம்களில் முடங்கிக் கிடந்து மழுங்கடிக்கப்படாது நாட்டிற்கும் வீட்டிற்கும்பயன்பட வழிவகுத்தது.

இதனடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதுதான் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுயசார்பு தொழில் முயற்சி நிதியமாகும். இத்திட்டம் மக்களை முயற்சிப் பணியில் ஈடுபடுத்தி ஒரு வருமானத்தைக் கொடுப்பதுமட்டுமன்றி, நங்களும் வாழ்கின்றோம்- எங்களாலும் வாழ முடியும் என்றதின் நம்பிக்கையையும், தளராதமனவுறுதியையும்கொடுக்கின்றது. விசேடமாகத் தற்போதைய சூழ்நிலையில் இத்

> இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுயசார்பு தொழில் முயற்சிநிதிய மூன்றாவது ஆண்டு நிறைவு. நிதியத்தின் அமைப்பு, நோக்கம், வளர்ச்சி, சாதனைகள் போன்றவற்றை விளக்குகின்றார் கட்டுரையாளர்

தகைய திட்டம் இன்றியமையாதது. சரித்திரத்தை நோக்குவோமானால் இப்படியான திட்டங்கள்போராட்டம் முடிந்து, மக்கள் மீளக் குடியமர்ந்து, சுமுகமான வாழ்க்கையை ஆரம்பித்த பின்னர்தான் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. ஆனால் இங்கு போராட்டமும் புனர்வாழ்வும் சமாந்திரமாகசெயற்படுவது எமது அனுபவ ரீதியான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் பிரதிபலிக்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட சுயசார்பு தொழில் முயற்சி நிதியமானது நாளடைவில், முன்னர் சிக்காக்கோ பல்கலைக்கழக பொருளியல் விரிவுரையாளரான மொகமெட் ஜீனூஸ் என்பவரால் பங்களாதேஷில் ஆரம்பிக்கப்பட்ட கிராமின் வங்கி போன்று வளர்ச்சியடைந்து, வறுமையிலும் வறுமையில் வாழும் மக்களின் சமூக நிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றால் அது மிகையாகாது. இதை த்தில் ஒரு நம்பிக்கையைவளர்க்கவும் 1990 ஆம் ஆண்டு பிற்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக சுயசார்புத் தொழில் முயற்சி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

தங்கு நிலையிலிருந்த மக்களை, இந் நிலையிலிருந்து மாற்றுவதற்கு மக்களின்மேலிருந்த நம்பிக்கையை மூலதனமாகக் கொண்டு மிகச் சிறிய தொகையுடன் ஆரம்பிக்கப்பட்டது. சுழற்சிமுறைக்கடன்களை வழங்கி, முதலில் கடன்களைப் பெற்றவர்கள் வாராந்தம் மீளளிக்கும் தொகையிலிருந்துவேறு சிலருக்குக்கடன் வழங்கவும் வழி வகுக்கின்றது இத் திட்டம்.

போரினாலும் பொருளாதாரத் தடையினாலும் ஏற்பட்ட நெருக்கடியான சூழலில் தொழிலை இனம்கண்டு கடன்வழங்குவது கஷ்டமானதால், பயனாளிகளே முயற்சிகளை இனம் காணும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். 53,000 ரூபாவுடன் ஆரம்பிக்கப்பட்டஇந்நிதியம் இன்று விருத்தியடைந்து ஒரு கோடி ரூபாவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

ஆரம்பத்தில் தொழில் முயற்சிகளை இனம் கண்டவர்களுக்குப் பொருத்தமான கடன்கள் வழங்கப்பட்டது. வட்டியின்றி மீளப்பெறும் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்த முகாம்களில் உள்ளவர்கட்கு மட்டுமன்றிப் பின்தங்கிய கிராமங்களில் உள்ள வறிய மக்களுக்கும் இத்திட்டம் உதவியது. வறுமையிலும் வறுமையில் வாழும் கிராமமக்களுக்கும்சுயதொழிலுக்கான கடன்கள் வழங்கப்பட்டு. இன்று தங்கள் வாழ்க்கையை ஓரளவு சீரான முறையில் செயற்படுத்துபவர்களாக இருப்பதைப் பார்க்கலாம்.

வட்டி இல்லாக் கடனாக வழங்கப்பட்ட நிதி, இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் மூலதன இழப்பையும், சேமிப்பு நிதிகளுக்கு எம்மால் கொடுக்கப்படும் வட்டியையும் ஈடுசெய்யும் முகமாகவும் மற்றும் நிதியின் நிர்வாகச் செல வாக்கி மீளளிக்கும் பணத்துடன், ஒரு சிறு தொகையை சேமிப்பாகவும் அறவிடப்பட்டது. தவிர சுயமாகச் சேமிப்புப் பணத்தை வைப்பவர்களுக்கு வட்டியும் வழங்கப் படுகின்றது, வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய உறவைப்பேணுவதற்காக இக்கடன் அறவீடுகள் வாராந்தம் பெறப்படுகின்றன. கடன்களைப் பெறும் ஒருவர் அக்கடனை 20 வாரங்களில் அதனைச் சேமிப்புடன் மீளளிப்புச் செய்ய வேண்டும், இதுமாத்திரமின்றிமாவட்டங்களில் வேலைவாய்ப்பளிக்கும் நிறுவனங்களுக்கு விசேட கடன்களாக வட்டியுடன் வழங்கப்பட்டுள்ளது.

வன்னிப்பிரதேச மக்களின் விவசாயத்தைக் கவனத்திற் கொண்டு அவர்களிற் பெரும்பாலோர் ஏழை விவசாயிகளாயிருப்பதால், பயிரிடும் காலங்களில் பயிர்ச்செய்கைக்கான மூலதனங்களை வைத்திருப்பதில்லை, தவிர உற்பத்திக்கான உள்ளீடுகள் நியாய விலையில் கிடைப்பதும்அரிது; அத்துடன் விவசாயிகள் நேரடியாக வங்கிக்குச் சென்று கடன்பெற முடியாத நிலை உருவாகி இருந்தது. ஏற்கனவே இவ்விவசாயிகளுக்கு உதவும் நோக்கமாக இந்நிதியத்தின் கீழ் விவசாயக் கடன் திட்டமும் உருவாக்கப்பட்டது.

சுயசார்பு முயற்சிகளை மையமாகக் கொண்ட திட்டங்களை மாத்திரமின்றி, சேவைகள் மையமாகக் கொண்டு, போர்க்காலச்சூழலில் மக்கள் தங்கள் நுகர்ச்சிப் பொருள்களை நியாய விலைக்குப் பெறும்பொருட்டு கிராமியக் கடைகள் திறக்கப்பட்டன. பருத்தித்துறை, பளை, நாகர்கோவில் போன்ற பிரதேசங்களில் இப்படியான கடைகள் காணப்படுகின்றன. இங்கு பொருட்களின் விலைகள் யாழ்ப்பாண நகரச் சந்தையில்நிலவும்விலைகளுக்குச் சமமாக இருக்கின்றது. குறிப்பிடத்தக்கது

### திட்டச் செயலாக்கத்தின் சாதனைகள்

- ஃ தொழில்முயற்சியில் ஆர்வ
- ஃ உரிய காலத்தில் உதவிகள் வழங்கப்பட்டால் மக்கள் நாணயம் உடையவர்களாயிருப்பர் என்பது வெளிப் படுத்தப்பட்டுள்ளது.
- ஃ கடன்களைப் பெற்றவர்கள் வாழ்க்கைக்கான வருமானத்தைப் பெறுவதோடு சேமிப்பையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர்.
- ஃ மக்களை நம்பி கடன் கொடுக்கப் பின் நின்றவர்கள் இன்று கடன்களை வழங்க ஆர்வமுடன் முன் வரும் நிலை உருவாக்கப் பட்டது.
- ஃ 96இலட்சம் ரூபாவை முதலீடாகக் கொண்டிருந்த திட்டம் சுழற்சிமுறை மூலம் 34,000,000ரூபாவை மீளளிப்பு உதவியாக வழங்கியுள்ளது.
- ஃ நிதியத்தின் மூன்றாண்டு நிறைவில் 11,810 குடும்பங்கள் உதவி பெற்றுள்ளன
- ஃ உதவி பெற்றவர்களின் சேமிப்பாக 48 இலட்சம்ரூபா நிதியத்துடன் உள்ளது.
- ஃ நிலுவைக் கடனாக தற்போது மக்களிடம் 12,000,000 ரூபா இருக்கின்றது.
- ஃ நிதியம் சிறுதொகைக் கடன்களில் ஆரம்பித்து, தற்போது பெரிய தொகைகள் கொண்ட கடன்களை வழங்கக்கூடிய நிலையை மக்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளை ஒரே பார்வையில் நோக்கும்போது மூன்றாண்டு நிறைவில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் 11,810 பயனாளிகட்கு, சுழற்சி முறையில் வழங்கிய கடன்தொகை 34,542,897ரூபாவாகும். மாவட்ட ரீதியாகப் பார்த்தால் யாழ். மாவட்டத்தில் 4,750 பயனாளிகட்கு 21,780,826ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்தில்1,198 பயனாளிகட்கு 3,312,400 ரூபாவும், முல்லை மாவட்டத்தில் 3,660பயனாளிகட்கு 5,90,348.7ரூபாவும் வவுனியா மாவட்டத்தில் 997பயனாளிகட்கு 2,938,098 ரூபா

லாவது விஜயமுமாகும்.

இந்த வகையில், சபாநாயகர் முகமதுவின் விஜயமானது முக்கியமானதாக இருப்பினும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் எந்தளவிற்கு அவரால் பங்காற்ற முடியுமென்பதும், இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஏதாவது திட்டங்களை அவர் கொண்டுள்ளாரா என்பதும், அவர் யாழ். வந்த பின்னரே தெரிவதற்கான வாய்ப்புக்களே அநேகம் உண்டு.

இதேவேளை, சபாநாயகர் முகமதுவின் விஜயம் பற்றி அரசாங்கத் தரப்பினர் இதுவரையில் அறிந்திருப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. ஆயினும், இது குறித்து அரசாங்கத் தரப்பினர் எதுவும் பேசவில்லை என்பது மட்டுமல்ல, சமாதானத் தீர்விற்கான சூழ்நிலை ஒன்று உருவாக்குவதற்கு மாறாகவே பேசியும் வருகின்றனர்.

சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவோ தனது கடும் போக்கில் இருந்து விட்டுக் கொடுப்பதாக இல்லை. தான் கொல்லப்பட்டாலும், அடுத்த பிறப்பிலாவது புலிகளை ஒழித்தே தீருவேன் என்ற தொனியில் பேசி வருகின்றார்.

அதேவேளை, செய்தியாளர்களை இரு தினங்களுக்கு முன்னர் சந்தித்த அமைச்சரவைப் பேச்சாளர் டிரோன் பெர்னாண்டோ விடுதலைப் புலிகளுடன் மூன்று நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்றும் இல்லையேல் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது, அடுத்த பிறப்பிலாவது தமிழர்களை ஒழிப்பேன் என்ற ஜனாதிபதியின் பேச்சும், நிபந்தனை ஏற்காது விட்டால் பேச்சுக்களுக்கு இடமில்லை என்ற அமைச்சரின் அறிவிப்புக்களுக்கும் இடையில் இடம்பெறும் சபாநாயகர் முகமதுவின் யாழ்ப்பாண விஜயமானது உண்மையில் நெருக்கடியின் மத்தியில் நிகழ்கின்றது என்பதில் சந்தேகமே இல்லை.

இதேசமயம், இச் சமாதான முயற்சியானது சபாநாயகர் முகமதுவிற்கு தென்னிலங்கையில் பல புதிய நெருக்கடிகளையும் ஏற்படுத்தி விடக் கூடும். கடந்த காலத்தில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் இவ்வாறே மனக்கசப்பையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தின. சிலவேளை சமாதான முயற்சிகளை மேற்கொண்டமைக்குப் பிரதியுபகாரமாக தனது அரசியல் ஸ்தானத்தை தக்கவைத்துக் கொள்ள சபாநாயகர் போராட வேண்டி வரலாம். ஆகையால், சமாதான முயற்சிகள் மேற்கொள்ள முற்படும் சபாநாயகர் முகமது இவற்றைக் கவனத்திற் கொண்டு செயலில் இறங்குவது விரும்பத்தக்கதாகும்.

கல்விவளர்ச்சி போன்ற குறை நிரப்புத் தேவைகள் அவசியமாகக காணப்பட்டன இதற்கான தீர்வு மக்களைத்தங்கு நிலையில் இருந்து, அவர்களுக்கு வருமானத்தை கொடுக்கக கூடிய சுயமுயற்சிக்கு மாற்றுவதெனத் தீர்மானிக்

சமூக நிலையில் பாரிய மாற்றத்தைஏற்படுத்தும் என்றால் அது மிகையாகாது. இதை நோக்கமாகக்கொண்டு ஏழை மக்களின் வறுமையைப்போக்கவும், வாழ்க்கை பூராவும் சேமித்து வைத்த உடைமைகளை இழந்தவர்களின் மன

கொடுக்கப்படும் வட்டியையும் ஈடுசெய்யும் முகமாகவும் மற்றும் நிதியின் நிர்வாகச் செலவையும் சரிசெய்யவும், வட்டியுடன் கூடிய கடனாக அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன் மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தையும் உரு

**சாதனைகள்**

ஃ தொழில்முயற்சியில் ஆர்வமிருந்தும் அதற்கான வசதியின்றி இருந்த மக்கள் நம்பிக்கையுடன் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

5,90,348.7ரூபாவும் வவுனியா மாவட்டத்தில் 997பயனாளிகட்கு 2,938,098 ரூபாவும் மற்றும் மன்னார் மாவட்டத்தில் 197பயனாளிகட்கு 601,526ரூபாவும்வழங்கப்பட்டுள்ளது.

# அரபு நாடுகளின் மாநாடு யசீர் அரபாத் அழைப்பு

(ரியுனிஸ்)

இஸ்ரேலுடனான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி ஆராய அரபு நாடுகள் அவசரமாகக் கூட வேண்டும் என்று பாலத்தீனிய விடுதலை இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது

பேச்சுக்களை மீள ஆரம்பிக்க உதவுமாறு அமெரிக்காவும் இஸ்ரேலும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கு நெருக்குதல் கொடுப்பதற்கு எதிராகஒருங்கிணைந்த நிலை ஒன்றை மேற்கொள்ள இது உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்,

பாலத்தீனியர்களின்சுயாட்சி பற்றிய ஒப்பந்தத்தை இஸ்ரேல் புறக்கணித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்

இதே வேளை ஐ நா பாதுகாப்புச் சபையில் ஏப்ரோன் மசூதிப் படுகொலைக்காகஇஸ்ரேலை கண்டிக்கும் தீர்மானம் நிறைவேறு வகைப் பொறுத்தே பாலத்தீனிய விடுதலை இயக்கம் தனது நிலைப்பாட்டை மேற்கொள்ளும் எனக் கூறப்படுகிறது

## ஒருகோடி கண்ணிவெடிகள்

கம்போடியாவில்சுமார்இருபது ஆண்டுகாலம் நீடித்த யுத்ததை தொடர்ந்து அந்நாட்டில் சுமார் ஒரு கோடிக்கும்அதிகமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக கம்போடிய இளவரசர் நொரடாம் சிகானூக் தெரிவித்துள்ளார்.

இதனால் மாதம்தோறும் சுமார் 600 பேர்வரை காயமடைகின்றார் எனவும் கம்போடியாவில் வாழும் மக்களைவிட கண்ணிவெடிகள் எண்ணிக்கையில் அதிகமாகி இருப்பதாகவும் இவற்றை முற்றாக ஒழிக்க 600 வருடங்கள் தேவைப்படும் எனவும் தெரிவித்தார்.

# தேர்தல் முடிவை எதிர்த்து காங்கிரஸ் வழக்கு தாக்கல்?

(சென்னை)

பழநி மற்றும் இராணிப்பேட்டை இடைத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக வழக்கு தொடர்வது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி ஆலோசனை மேற்கொண்டுள்ளது, இக்கட்சியின் செய்தித் தொடர்பாளரான தி. க கிள்ளிவளவன் சென்னையில் வெளியிட்டு இருக்கும்ஒரு அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் முதல்வர் ஜெயலலிதா அரசு இயந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்திய தன் காரணமாகவே இத்தேர்தல்களில் அ தி, மு. க வெற்றி பெறமுடிந்தது.

ஜெயலலிதா அரசுபிறப்பித்த ஆணைகள் பலவும் தற்போது நீதிமன்ற விசாரணைகளையடுத்து செல்லாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு வருகிறது மருத்துவ பட்ட மேற்படிப்பு. மண்ணெய் வாங்குதல் சம்பந்தமாக தமிழக அரசு பிறப்பித்த ஆணை என்பனவற்றில் தமிழக அரசின் நியாயங்கள் எடுபடவில்லை. இவற்றில் தமிழக அரசு பிறப்பிக்கும் ஆணைகள் அனைத்தும் சென்னை நீதிமன்றத்திலும் புதுடில்லி உச்சநீதிமன்றத்திலும் மரண அடிவாங்கியுள்ளது. எனவே இந்த இடைத்தேர்தல் முடிவுகள் தொடர்பாக காங்கிரஸ் வழக்கு தாக்கல் செய்ய ஆலோசிப்பதாகவும் தெரிவித்தார்.

# இஸ்ரேல்- பாலத்தீன பேச்சு மீண்டும் ஆரம்பிக்கும்

## – அமெரிக்கா நம்பிக்கை

(வாஷிங்டன்)

இஸ்ரேலும், பாலத்தீன விடுதலைஇயக்கமும் மீண்டும் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரபுப் பிரதேசங்களில் வாழும் பாலத்தீனியரின் பாதுகாப்பு தொடர்பாக ஆராய்வதற்காகவே இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் வாறன் கிறிஸ்தோபர் கூறியுள்ளார்.

ஏப்ரோன் பள்ளிவாசல் படுகொலையைக் கண்டித்து ஐ. நா. பாதுகாப்புச்சபை தீர்மானம் நிறைவேற்ற இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்க வெளியுறவுச் செயலரின் அறிக்கை வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிரியா, ஜோர்தான், மற்றும் லெபனான் ஆகியவையும் அடுத்த மாதத்தில் மீண்டும் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் எனவும்வாறன் கிறிஸ்தோபர் நம்பிக்கை வெளியிட்டார்.

# ஜமாய்த்தேஇஸ்லாமிமீதான தடை நீதிமன்றினால் ரத்து

(டில்லி)

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் 1992 டிசம்பரில் மத்திய அரசு ஜமாய்த்தே இஸ்லாமி என்ற அமைப்பின் மீது விதிக்கப்பட்ட தடை உத்தரவு செல்லுபடியாகத்தக்கது அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

டிசம்பர் மாதத்தில்அயோத்தியாவில் சர்ச்சைக்குள்ளான பாபர்மசூதி வளாகம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதை யடுத்து இந்த அமைப்பின்மீது தடைவிதிக்கப்பட்டது தெரிந்ததே.

இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு தெளிவாக நியாயப்படுத்தப்படவில்லை எனக் கூறி டிவிசன் பெஞ்சு நீதிமன்றம் அரச அறிவிப்பை ரத்துச் செய்துள்ளது

## விடுதலை செய்யக் கோரிக்கை

(ஜெனீவா)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பர்மிய எதிர்க்கட்சித் தலைவரான திருமதி ஆங்சான் சுயீயை விடுவிக்கும்படி ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பு பர்மிய அரசிடம்கோரிக்கைவிடுத்துள்ளது.

பர்மிய அரசினால் அரசியல் காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் ஐ நா. மனித உரிமை அமைப்பு வலியுறுத்திக் கேட்டுள்ளது.

**வீட்டினில் பயிர்கள் தழைத்தாலே போதும்
வாட்டமே இன்றி வாழ்வது போகும்**

# குளத்தில் விளையாடிய சிறுவன்நீரில்மூழ்கிமரணம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அம்மன் கோவிலடியில் உள்ள குளமொன்றில் குளித்து விளையாடிய சிறுவர்களுள் ஒருவர் நீரில்மூழ்கியதால் மரணமடைந்துள்ளார். ஒருவர் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: நேற்றுக்காலை விறகுபொறுக்குவதற்காக மூன்று சிறுவர்கள் சென்றதாகவும் அவர்கள் குளத்தில் இறங்கி குளித்து விளையாடிய போது அவர்களுள் ஒருவரான கனகலிங்கம் சுதாகரன் (வயது 12)என்னும் வாய்பேச முடியாத சிறுவன் நீரில் மூழ்கி மரணமடைந்ததாகவும் தெரியவருகின்றது. மேலும் கதிரவேலு கனகலிங்கம் (வயது 10) என்பவர் நீரில் மூழ்கி மூச்சுத் திணறிய நிலையில் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ

# 'கோமாரியில்' தபால்கள் அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கும் ஏனைய வெளியூர்களுக்குமான தபால்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ''கோமாரி'' கப்பல் மூலம் இங்கிருந்து அனுப்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். தபாலகவட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே தபால்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு முன்னதாக யாழ். பிரதான தபாலகத்தில் சேர்க்குமாறு பொதுமக்களை தபாலக வட்டாரங்கள் கேட்டுக்கொண்டுள்ளன. (பா)

# அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் ஆரம்பம்

தியாகச்சுடர் பூபதி அன்னையின் 6 ஆம் ஆண்டு தொடர் நினைவு நிகழ்வுகள் நேற்று உணர்வுபூர்வமாக குடாநாடெங்கிலும் ஆரம்பமானது.

சனசமூக நிலையங்கள், பொதுஇடங்கள், வீடுகள், பாடசாலைகள், விடுதலைப் புலிகளின் முகாம்கள் எங்கும் மஞ்சள் - சிவப்பு கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வாழை, தோரணங்கள் கொண்டு விசேடமாக நிறுவப்பட்டிருந்த பந்தல்களில் அன்னையின் திருவுருவப் படங்கள் வைத்து மாலைகள் அணிந்து மலர்கள் சாத்தி மங்கல விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன.

கோட்ட மட்டத்தில் செய்யப்பட்டிருந்த ஒழுங்கின்படி நினைவுக்கூட்டங்களும், கிரமதான நிகழ்வுகளும் நடைபெற்றன.

விசேடமாக நிறுவப்பட்டிருந்த அன்னை பூபதி நினைவுப் பந்தல்களில் எழுச்சிக் கீதங்கள் மற்றும் உரைகள் என்பன ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. (21)

---

## மட்டக்களப்பில்

ஃ வீரவேங்கை நீசு குமார் (சிற்றம்பலம் பாக்கியராஜா கிண்ணியடி வாழைச்சேனை)

ஃ வீரவேங்கை தங்கரதன் (வன்னியர் கிறைராஜ் கோட்டைக்கல்லாறு கல்லாறு)

ஃ வீரவேங்கை ஈழவேந்தன் (கந்தலிங்கம் கணேசலிங்கம் சிறுவா முனை விழா வெட்டுவான்)

ஃ வீரவேங்கை பாவேந்தன் (தங்கராஜப்பிள்ளை சண்முகநாதன் தும்பங்கேணி திக்கோடை)

இவர்களுக்கு புலிகள் தமது

## தமிழீழ

தனர்.

இம் மன்று, சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்டவரான திருமதி தவா மகேஸ்வரி என்பவரால் மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கான வழக்கிலக்கம் 8ஐ விசாரித்து தீர்ப்பு சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் வழங்கப்படுமென கூறி முதலாவது அமர்வை நிறைவு செய்தது.

இம் மன்றின் தொடக்க நிகழ்வில் மாவட்ட நீதிமன்ற நீதியாளர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## ராணுவம்

பழுகாமம் மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு புலிகள் தமது

# பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கைக்கடிகாரம் ஒன்று யாழ் இந்து மகளிர்கல்லூரிமாணவியினால் கண்டெடுக்கப்பட்டுக் கல்லூரி அதிபர் ஊடாக யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

# இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நோய் காரணமாக நேற்று முன்தினம் இருவர் மரணமானார்கள்.

இ. சதீஸ்குமார் (வயது 13) புலோலி, இ மன்மதன் ஜெனனீனா (வயது 1) கொழும்புத்துறை ஆகியஇருவருமேமரணமானவர்களாவர்.

# பள்ளிமுனையில் மோதல்

(கொழும்பு)

மன்னார் பள்ளி முனைப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஒரு தனிநாட்டின் அங்கமாக அமையும் தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றம்

## நீதிமன்றத் திறப்புவிழாவில் கரிகாலன்

(நமது நிருபர்)

''நாம் தனிப்பட்ட ஒரு நாட்டை உருவாக்க வேண்டும். எமக்கொரு நாட்டை விஸ்தரிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தமிழீழ நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு மக்களுடைய அன்றாட பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றது அந்த தீர்ப்புகளில் திருப்தியற்ற மக்கள் தங்களுடைய பிரச்சினைக்கேற்ப திருப்தியான ஒரு தீர்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த மேன்முறையீட்டுநீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுடைய அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படும்'' இவ்வாறு யாழ். மாவட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எங்களுடைய தமிழ் தேசியத் தலைவரால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தப் போராட்டத்தை நிருவகித்துக் கொண்டிருக்கின்ற அந்த நேரத்திலே மக்களுடைய அன்றாடப்பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக்கொண்டுதான் வந்துள்ளார்.

விடுதலை வெற்றி பெறுகின்ற நேரத்திலே எங்களுடைய நிருவாகக் கட்டமைப்பையும் எமது மக்களுடைய பிரச்சினைகளையும் பூரணமாக தீர்க்ககூடிய ஒரு நிலையில் நாங்கள் வளர்ந்து நிற்கின்றோம் என்பதையே இந்த வளர்ச்சிகள் காட்டுகின்றது.

மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கி அந்த நீதிமன்றங்களிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்றுதான் ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. எமதுவிடுதலைப் போராட்டமும் எங்களுடைய அனுபவத்தின் வாயிலாக ஒரு மிகப்பெரிய வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. இன்று ஒரு நாட்டை நிருவகிக்கக்கூடிய பூரண ஆற்றல் உள்ளவர்களாக எங்களுடைய போராளிகள் மாற்றப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஒருநாட்டை மீட்கவேண்டும் என்ற உணர்வோடும் தங்கள் இன்னுயிரை தற்கொடை செய்யத் தயாராக இருக்கும் இப்போராளிகள் இந்த மக்களுடைய நிருவாகத்திலும் பங்குகொண்டு அதனை நேர்மையாக ஒரு நிரந்தரமான மக்களுக்கு நம்பிக்கைஊட்டக் கூடிய தீர்ப்புகளை வழங்கி அவர்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக இன்று விடுதலைப் புலிகள் மாறிக்கொண்டு வருகிறார்கள்.

நாம் எம்முடைய செயற்பாடுகளில் நேர்மையை கடைபிடிக்கின்றோம் கண்ணியத்தைக் கடைப்பிடிக்கின்றோம் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக நாங்கள் மாறிக்கொண்டிருக்கின்றோம்.

எம்மை 'பயங்கரவாதிகள்' ஒரு இனத்தை படுகொலை செய்பவர்கள் எம்மக்களை நாங்கள் கொலை செய்கின்றவர்கள் என்றெல்லாம் சிறிலங்கா அரசு செய்கின்ற பொய்ப் பிரசாரங்கள் எங்களுடைய நடைமுறையில் எம்மால் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளையும் நிருவாகங்களையும் பார்த்ததும் இவர்களது அந்த பிரசாரங்கள் அடிபட்டுபோகின்றன.

எங்கள் மீது அனைத்துலகம் ஒரு நம்பிக்கை கொண்டுள்ளது நாங்கள் ஒரு நேர்மையான நிரந்தரமான மக்களுக்கான சேவையை செய்கின்றோம் இதுவே ஒரு மிகப் பெரிய அச்சுறுத்தலாக எமக்கிருக்கின்றது.

சிறிலங்கா அரசு உணர்ந்து கொண்ட நிலையை விட அனைத்துலக நாடுகள் எங்கள் போராட்டத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறது என்பதை செய்திகள் எடுத்துக் காட்டுகின்றது. ஆகவே நாம் இன்று நடைமுறைப்படுத்துகின்ற இந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் எங்களின் போராளிகளினுடைய மிக நேர்மையான செயற்பாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது மக்களினுடையநம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றது இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பானது சிறந்த முறையில் வளர்ந்து கொண்டு போவதற்கு கற்றறிந்த அறிவாளிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கி மீண்டும் இந்த அமைப்புக்களை வளர்த்தெடுப்பதற்கு உங்களுடைய பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# வடக்கு - கிழக்கு இணைப்பு தேவையற்றதொன்று - சிறிமாவோ பண்டாரநாயக்கா

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைப்பு தேவையற்ற ஒன்று. இந்த இணைப்பை எமது கட்சி எப்போதுமே எதிர்த்து வந்துள்ளது. இவ்வாறு இணைப்பு குறித்து கொழும்பு தினசரி ஒன்றிற்கு கருத்து தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு இணைப்பு அபிப்பிராய வாக்கெடுப்பு என்பனவற்றைப் பற்றி தமிழர், முஸ்லிம், சிங்களவர் ஆகிய மூத்தரப்பினரதும் அபிப்பிராயத்திற்கிணங்கவே செயற்பட வேண்டும் என்றார்.

இணைப்புக் குறித்துகருத்து தெரிவித்த சிறீலங்கா விகாராதிபதி மாதுலுவாவே யோகித்ததேரோ, வடக்கு கிழக்கை ஒன்றிணைப்பது சட்டவிரோதமானது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கை இணைக்க வேண்டும் என்ற தீர்மானம் உண்டு. ஆனால் அந்த ஒப்பந்தம் செயலற்ற ஒன்றாகி விட்ட நிலையில் அது தேவையற்ற ஒன்றாகிவிட்டது. மேலும் இரு மாகாண இணைப்பும் தமிழருக்கே சாதகமாகிவிடும் அல்லது ஈழப்போருக்கு வலு சேர்க்கும், எனவே இணைப்பு என்பது ரத்து செய்யப்பட வேண்டும் என்றார்.

வடக்கு கிழக்கு இணைப்பு சட்டரீதியானதல்ல. இது தொடர்பாக சட்டரீதியான வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியமில்லை. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குப்பலம் இணைப்பை நிராகரிக்க போதுமானது எனக் குறிப்பிட்டார். மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தனா.

# அரச சேவைகளை சீரமைக்குமாறு ஜனாதிபதி டி. பி. க்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் யாழ் குடா நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் அரச திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவுக்கு

பெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்டிருக்கும் அரச சேவைகளைச் சீரமைக்கும்படி கோரியும் பொது மக்கள் மீதான அரசபடைகளின் தாக்குதல்களைக் கண்டித்துமே மேற்படி மகஜர் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மிகவிரைவில் அமைக்கப்படவிருக்கும்

ப்புக்களின் அதிகாரிகள் அங்கம் வகிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# இறுதிப் போட்டி

வலிகாமம் வடக்குபிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்த விளையாட்டு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின்

# பாதுகாப்பு அமைச்சின் எச்சரிக்கை

(கொழும்பு)

சந்தேகத்திற்கு இடமான நபர்கள், கவனிக்கப்படாத நிலையில் உள்ள பார்சல்கள், வாகனங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைப்பணியகம் மீண்டும் அறிவுறுத்தியுள்ளது.

# ஆறு மீனவரைக் காணவில்லை

(கொழும்பு)

கடந்த புதனன்று புத்தளம் மாவட்டம் குதிரைமலை அருகே நடைபெற்ற சம்பவத்தில் ஆறு மீனவர்களைக்

(...) கநாதன் தும்பங்கேணி திக் கோடை)

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(...) களே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வேலை வாய்ப்பு

## கணக்காய்வு உத்தியோகத்தர் (ஆண்)

**தமிழீழ அரசியற்துறைக்கு** மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்

1) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தக பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2) கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (Diploma in Accountancy) சான்றிதழ் அல்லது சீ ஐ எம். ஏ. (CIMA) பகுதி 1-3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

(1இலும் 2இலும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல தனியார் / அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல்வேண்டும்)

3) அரசாங்க / தனியார் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள் ஆகக் குறைந்தது பத்து வருடங்கள் கணக்காய்வு வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 25-03-94 ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ அரசியற்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், கச்சேரி கிழக்கு, சுண்டுக்குளி, தமிழீழம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை அனுப்பும்போது கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''கணக்காய்வு உத்தியோகத்தர்'' என்று எழுதப்படல் வேண்டும்.

அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்.

(இ-8872)

(...) நிலை-இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கை இணைக்க வேண்டும் என்ற தீர்மானம்

**வடக்கு - கிழக்குப்**

ளுக்கு குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவோம்- எல்லாவற்றையும் தனியார் மயப்படுத்த மாட்டோம் அத்தியாவசிய தேவைகளை செயல்படுத்தும் சேவைகளை அரசே பொறுப்பேற்கும் என்றார்.

**அரசு**

ஐ நா. மன்றம் மனித உரிமைகள் சபையின் மனித உரிமைகள் குழு, விசாரணை செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்க ஐ நா. மன்றின் செயலாளர் நாயகம் தமது செல்வாக்கினைப் பயன்படுத்த வேண்டும் என்று கோருதல்

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்துக் கோவில்கள் இராணுவ நடவடிக்கை மற்றும் விமானக்குண்டுவீச்சினால் சேதமாக்கப்பட்டுள்ளன. புனரமைப்புச் செய்யுமாறு பல அமைப்புகள் விட்ட கோரிக்கையை அரசு புறக்கணித்து வருகிறது. கோவில்கள் இந்துக்களின் வழிபாட்டுத் தலங்கள் மாத்திரமின்றித் தமிழரின் கலாசார மையமாகவும் விளங்குகின்றன. இவற்றை யுனெஸ்கோ மூலம் புனரமைத்துத் தருமாறு ஐ. நா. மன்ற செயலாளர் நாயகத்தைக் கேட்பது,

பொருளாதார ஊக்குவிப்புக்கள் கொடுத்து மதமாற்றம் செய்யும் சில கிறிஸ்தவக் குழுக்களின் நடவடிக்கை குறித்துப் பேரவை கவலை தெரிவிக்கின்றது. இச்செயல் தமிழ் மக்களிடையே சமயக் குரோதங்களையும், வேற்றுமைகளையும் ஏற்படுத்துமாகையால் இக்குழுக்கள் பொருளாதார ஊக்குவிப்புகள் மூலம் மத மாற்றம் செய்வதை உடனடியாக கைவிட வேண்டும்.

(...) குறித்தும் ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவுக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்படவுள்ளது.

நீண்ட காலமாக யாழ். குடாநாட்டு மக்களுக்காக அரச திணைக்களங்களினது சேவைகள் சீர் குலைந்துள்ளன. அத்துடன் குடாநாட்டில் இயங்கும் பொது சேவை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் மூலமாக மக்களுக்கு கிடைக்கும் சேவைகளும் கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சேவைகளை பொது மக்கள் பெற்றுக் கொள்ள முடியாத சூழலில் மக்கள் மீது சிறிலங்கா அரச படைகளின் குண்டுத் தாக்குதல்கள் தொடர்ந்து நடை

**கடல்**

ங்கத்திற்குமிடையே இழுபறி நிலை நிலவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் இத்தடை தளர்வை ஏற்படுத்தி மீனவர் நிவாரணத்தை நிறுத்த யோசித்துள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்பை கவனத்தில் எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

(தி. பா)

(...) அனுப்பிவைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மிகவிரைவில் அமைக்கப்படவிருக்கும் துறைசார் வல்லுநர்கள் அமைப்பு மேற்படி மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க இருக்கிறது.

இத்துறைசார் வல்லுநர் அமைப்பில் குடாநாட்டில் கடமையில் இருக்கும் அரச மற்றும் அரசசார்பற்ற அமை

## விளையாட்டு நிகழ்வுகள்

கைதடி நாவற்குழி மறவன்புலோ கிராமிய பாசறை நிகழ்வில் இன்றைய நிகழ்வாக செற்றப் முறையிலான கரபந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, உடற்பயிற்சி கண்காட்சி, என்பன இடம் பெறும் இதில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுகழகமும் பங்குபற்றும்.

மாலை 4 மணிக்கு நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டியில் நாவற்குழி மகா வித்தியாலயமும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் பங்குபற்றும் பிற்பகல் 3 மணிக்கு யாழ்பாடசாலைகளின் உடற்பயிற்சி கண்காட்சி நடைபெறும்.

(...) செய்த விளையாட்டு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்றுமாலை 4 மணிக்கு மல்லாகம் சிறீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் காங்கேசன் துறை யங்றோயல் வி. கழகமும் அளவெட்டி யுத்தி, கழகமும் விளையாடவுள்ளன.

மாவட்டம் குதிரைமலை அருகே நடைபெற்ற சம்பவத்தில் ஆறு மீனவர்களைக் காணவில்லைஎன பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. காணாமற்போன மீனவர்களை மீட்கும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 19 03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 1329

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-
42-4293, 27-4301, 28-7978, 24-6855, 43-4045, 24-416, 24-4185, 22-8777, 24-7267, 42-1750, 24-5041, 24-878, 41-1531, 24-3063, 27-5077, 40-2573, 24-4236

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்-:
28-4545, 27-525, 26-4126, 26-4281 26-3076, 40-2677, 27-9833, 27-6024, 26-8430, 28-9927, 28-8589, 24-5177, 40-1688, 24-9490, 24-4854, 42-9220.

# மரண அறிவித்தல்கள்

## திரு. க. மூ. சி. செல்லத்துரை

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, கோல்ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. க. மூ. சி. செல்லத்துரை 1994. 03. 18-ம்திகதி காலமாகிவிட்டார். இவர் தேவரையாளி இந்துக் கல்லூரி பிதாமகரும், வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவுமாகிய அமரர் க. மூ. சின்னத்தம்பியின் இளைய மகனும், திருமதி செல்லத்துரை செல்லப்பாக்கியத்தின் அன்புக் கணவரும், மேற்படி கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. மூ. சி. சீனித்தம்பி, திருமதி ஆழ்வாப்பிள்ளை பாக்கியம், திரு-மூ. சி. சம்பந்தநாதன் (சரவணாஸ் யாழ்), ஆகியோரின் சகோதரரும், திருமதி யோகராசா நிர்மலா, திருமதி ரூபச்சந்திரன் செல்வகுமாரி (டென்மார்க்), செல்விகள் சிதம்பரா, இராசமணி, வனஜா, சின்னத்தம்பி ஆகியோரின் தகப்பனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 1994- 03- 18-ம் திகதி நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்

செல்லம்மை வாசம்,
வதிரி, கரவெட்டி-

இ. யோகராசா (சோதிடர்)
மருமகன்

(7807)

## சோமசுந்தரம் சரஸ்வதி

அரசடி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகேசு சோமசுந்தரத்தின் (இளைப்பாறிய ஆசிரியரும், ஆர்மோனியம் வாசிப்பவரும்) மனைவி சரஸ்வதி காலமாகிவிட்டார். இவர் தயாநிதியின் அன்புத்தாயாரும், உதயகுமாரின் அன்புமாமியாரும், மஞ்சுபாஷினியின் அன்புப் பேத்தியும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

155, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(இ-8873)

தகவல்:
மு. சோமசுந்தரம்
(கணவர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.